ராஜேந்திரப் பிரஸாத்



3147

அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை.

தேச பக்தர் சரிதை.—4

சாந்த சொரூபன்

ராஜேந்திரப் பிரஸாத்

இது

'தமிழ் சுயராஜ்யா' பத்திரிகையின் ஆசிரியராகவும்,
'சுதேச மித்திரன்' உதவி ஆசிரியராகவுமிருந்தவரும்,
'சுயராஜ்ய பேரிகை' நூல்களின் ஆசிரியருமான

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

இயற்றியது.

மாகாண காங்கிரஸ் தலைவர்

திரு. எஸ். சத்தியமூர்த்தி, எம்.எல்.ஏ.,

அவர்கள் சிறப்புரையுடன் கூடியது.

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

காபிரைட்] [விலை அணா 4

First Impression.—17—10—1935.
Reprinted.— 9—11—1935.

ஆரியமத உபாக்யானம்

எங்கள் வெளியீடுகளில் தலைமை வகிப்பது. தெலுங்கு, கன்னடப் பதிப்புக்களும் உண்டு. 150,000-பிரதிகள் வரை செலவாகி யிருப்பதே, இவைகளின் சிறப்புக்கும், உயர்வுக்கும் தகுந்த அத்தாட்சி அல்லவா ? இவைகளில், அரிய நீதிக் கதைகளும், கண்ணைக்கவரும் போடோ படங்களும் நிறைந்துள்ளன. சிறுவர் சிறுமிகளும் களிப்புடன் வாசிக்கக்கூடிய இனிய எளிய நடையில் இவை எழுதப்பட்டுள்ளன.

(முதல் பாகம், 22-ம் பதிப்பு.) : : (2-ம் பாகம், 16-ம் பதிப்பு.)

முதல் பாகம் அணு **8** : : இரண்டாம் பாகம் அணு **10**

சிறப்புரை

'நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே'

உலகச் சிரேஷ்டர்களின் சரிதையை எழுதுவதும், படிப்பதும், நமக்கு நல்லதையே செய்யும். ஆதலினால்தான் வடமொழியிலும் தென்மொழியிலும் சத்சங்கத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசியுளர். தமிழ்ப் பாஷையில் இம் மாதிரியான சரிதைகள் இப்போதுதான் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஸ்ரீயுத ராஜேந்திரப் பிரஸாத் காங்கிரஸ் தலைவர் என்பது மட்டுமில்லை; மகா புருஷரும் ஆவார். அவர் தமக்கென வாழாது, பிறர்க்கெனவே வாழும் சிறந்த தேச ஊழியர்; நற்குண நற் செய்கைகள் நிரம்பியவர்; நல்லொழுக்கமும் வாய்ந்தவர்; ஜீவகாருண்யத்தில் சிறந்தவர்; தன்னல மறுப்பே உருவாக இருப்பவர்!

வக்கீல் தொழிலில் வந்துகொண்டிருந்த - இன்னும் அதிகமாக வரக்கூடிய - ஏராளமான வருமானத்தைத் தியாகம்செய்தார்; லௌகிக போக ஐசுவரியங்களை எல்லாம் துரும்பெனத் தள்ளி, ராஜீய சந்நியாசியாக விளங்குகிறார்.

அவர், மகாத்மா காந்தியின் அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவர்; மகாத்மாவுக்கு ராஜேந்திரரைப் போல் இரண்டு சிஷ்யர்களே உண்டு என்பது எனது துணிபு. இருவரில் ஒருவர் சர்தார் வல்லபாய் படேல்; மற்றவர் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார்.

பாபு ராஜேந்திரப் பிரஸாதர் இந்த வருஷம் காங்கிரஸ் தலைவர்; எனவே நமது தேசத்தின் முடிசூடா மன்னர். அவர் இச்சமயம் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்ய வருகின்றார். தமிழ் நாட்டார் அவரை மிக்க அன்புடன் குதூகலமாய் வரவேற்பார்கள். ஆனால் அன்பும்

குதூகலமும் அறிவுடன் சேர்ந்தால், இன்னும் சிறப்பாக விளங்கும்.

அந்த அறிவை ஊட்டுவதற்கு இப்புத்தகம் பேருதவியாக இருக்கும். இதனை எழுதியவர், என் நண்பர் ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்; இருபது வருஷமாகத் தேச ஊழியஞ்செய்பவர். பன்முறை சிறைசென்றவர்; நல்ல படிப்பாளி; திறமையான எழுத்தாளி. பல நூல்கள் எழுதிப் பெயர் பெற்றவர். ஆதலின், இந்நூல் அனைவரும் ஆவலுடன் படித்துப் பயன்பெறக் கூடியது. நடையில் ஓர் அழகும் உணர்ச்சியும் காணப்படும். காங்கிரஸ் தலைவரின் சரிதத்தை, காங்கிரஸ் ஊழியரும் தியாகியுமான ஒருவர் எழுதுதல் விசேஷமே. சுவை மிகுந்த இந்நூலை இச்சமயத்தில் எழுதுவதும் விசேஷமாம்!

பதிப்பாளரான அல்லயன்ஸ் கம்பெனியாரோ நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். இதற்கு முன்னம் பண்டித மோதிலால் நேரு, விட்டல்பாய் படேல், அரங்கசாமி ஐய்யங்கார் ஆகிய பெரியாரின் சரிதங்களை வெளியிட்டு உதவியவர்கள். அந்நூல்களும் நம் தமிழ் நாட்டார் ஆவலுடன் படிக்கத் தக்கவை. மக்களின் நன்மையைக் கருதி, உயர்ந்த நூல்களை அழகிய அச்சில், நல்ல கட்டடத்தில் வெளியிடும் அல்லயன்ஸ் கம்பனியாருக்குத் தக்க ஆதரவு கிடைக்குமென நினைக்கிறேன்.

இப்புத்தகத்தின் மூலம் பாபு ராஜேந்திரப் பிரஸாதின் சரித்திரத்தை இது சமயம் தமிழ் நாட்டாருக்குப் புலப்படுத்துதல் தேச சேவை யாகும். ஆதலின் நூலாசிரியர், பதிப்பாளர் இருவருக்கும் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் அளிப்பின், மேன் மேலும் இதுபோன்ற சிறந்த புத்தகங்கள் வெளிவருதற்கு அனுகூலமாயிருக்கும்.

வந்தே மாதரம்

சென்னை,
13—10—35.

எஸ். ஸத்யமூர்த்தி.

முகவுரை

உலகம் போற்றும் உத்தம புருஷர் மகாத்மா காந்தி. அவரது அரிய சிஷ்யர் பாபு ராஜேந்திரப் பிரஸாதர். தியாக சமுத்திரம் என்றால் இவருக்குத் தகும். இகம், பரம் இரண்டினுக்கும் இன்பம் தரவல்லது இவர் சரிதம். தற் சமயம் நமது தமிழகத்தின் விருந்ினராக வந்திருக்கிறார். இவர் மகிமையை மக்கள் அறிதல் அவசியம். ஆதலின் இதனை எழுத நேர்ந்தது.

இதுபோல் பற்பல பெரியாரின் சரிதங்களை எழுதுவ தாக உத்தேசம். தமிழ் மக்களின் அன்பும் ஆண்டவன் அருளும் தட்டாது கிட்டுமாக. ஊருக்கு உழைத்து, உடல் இளைப்பினும், உள்ளம் உயரும், வள்ளலை அறியலாம். தேசப்பணியே தெய்வப் பணி. இதற்கு உதாரணம் இவர் திவ்ய சரிதம். ஒரு பணியெனக் கொண்டு இதனை எழுதி யுள்ளேன். வந்தே மாதரம்.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

நூலாசிரியர்

பொருளடக்கம்

				பக்கம்
	சிறப்புரை	...	...	3
	முகவுரை	...	...	5
1.	முன்னுரை	...	...	9
2.	பாலப் பருவம்	...	...	10
3.	வாலிப ஊழியம்	...	...	14
4.	தியாகத் திருவாசகம்	...	...	17
5.	உள்ளங் கிழிதல்	...	...	26
6.	வக்கீல் தொழில்	...	...	29
7.	ஏழை பங்காளன்	...	...	32
8.	காந்தி போதம்	...	...	36
9.	காங்கிரஸ் ஊழியம்	...	...	39
10.	மேனுடுகளில் சஞ்சாரம்	...	...	43
11.	சிறை வாசம்	...	...	45
12.	பூகம்ப நிவாரணம்	...	...	48
13.	ஊழியத்தின் பலன்	...	...	52
14.	அக்கிராசனப் பிரசங்கம்	...	...	55
15.	பாபுவின் குடும்பம்	...	...	61
16.	புகழ்மாலை	...	...	63
17.	முடிவுரை	...	...	65

By the courtesy of the 'Jaya Bharati'



சாந்த சொரூபன் - பாபு ராஜேந்திரப் பிரஸாத்

உ

சாந்த சொரூபன்

ராஜேந்திரப் பிரஸாத்

1. முன்னுரை

"சத்தியம், அஹிம்ஸை, காதி - மூன்றும் மூன்று சக்திகள். அவை கொண்டு, சுயராஜ்ய சித்தி மட்டுமா? இன்னும் மேலான சித்தியும் எய்தலாம்! ஆனால், சுயராஜ்ய சித்திக்குரிய தியாகம் செய்தாக வேண்டும். இதனை எவரும் மறத்தலாகாது. இன்றளவும் எவ்வளவோ தியாகம் செய்துள்ளோம்; தேசமும் பிரமாதமாக முனைந்து முயன்றுளது. அது கண்டு, அனைவரும் பெருமை கொள்ளலாம்! என்றாலும், எடுத்த காரியம் கைகூட, இன்னும் எவ்வளவோ தியாகம் செய்யவேண்டும். நமக்குள்ள பொறுப்போ சாமானியம் அன்று; மிகவும் மகத்தானது; பெருமையும் வாய்ந்ததாம்!

"அப் பொறுப்பை நிறைவேற்ற, அழியாப் பொறுமையும் சலியா உழைப்பும் தளராத் தியாகமும் தேவை. காலசக்கரம் நமக்கு அனுகூலமாகவே சுழல்கின்றது. உலகப் போக்கும் அப்படித்தான். கடவுளும் நமது பக்கம் இருக்கிறார். புராண இதிகாசங்களில் காண்பது போன்ற பிரமாதமான போராட்டத்தில் முனைந்துள்ளோம். நிராயுதபாணிகளான நம் தேசத்தவர்க்கு ஸத்தியாக்ரகமும் அஹிம்ஸையுமே சிறப்பான சக்திகள். முன் வைத்த காலை நாம் பின் வாங்கப் போவதில்லை. நமது லட்சியம் பரிபூரண சுயராஜ்யமேயாம்!"

இவ்விதம் பேசிய பெருமான் பாபு ராஜேந்திரப் பிரஸாத். இந்த 1935-ம் ஆண்டு அவரே நம் தேசத்தலைவர்; காங்கிரஸ் மகாசபையின் நாயகர்; மகாத்மா காந்தியின் பிரதம சீடர். சர்வ சங்கப் பரித்தியாகி; தர்மபுத்திரரைப் போன்ற சாந்த சொரூபி; ஏழைக்கு இரங்கும் இனிய புருஷர்; படாடோபமில்லாத பரம ஊழியர்; பீகார் மாகாணத்தின் பிரதான புதல்வர்; கள்ளம் கபடு இல்லாத கண்ணிய சீலர்; கருமத்திலேயே கண்ணுயிருக்கும் கருணை மூர்த்தி. அவரது ஜீவிய சரிதம் வருமாறு:—

---

2. பாலப் பருவம்

புண்ணிய கங்கை பாயும் பிரதேசம் பீகார் மாகாணம். மகாபாரத காலந் தொட்டு, அம் மாகாணம் மகிமை வாய்ந்தது. நவநந்தனர் எனும் பேரரசர் ஆங்கிருந்தே அரசு செலுத்தினர். கிரேக்க வீர வெள்ளத்தைப் புரட்டி எறிந்த சந்திரகுப்த சக்கரவர்த்தி அங்குத்தான் பேரரசு கண்டு பெரு வாழ்வு கொண்டான். அவனி யெங்கும் அன்புக்

கொடி தூக்கிய அசோக மகா ராஜனது ராஜதானியும் அதுவேயாம். மகத சாம்ராஜ்யத்திற்கு அம் மாகாணமே தாயகமாக இருந்துவந்தது.

சித்தார்த்தரது புத்த மதம் முதன் முதல் அங்கே வேரூன்றி வானுற வளர்ந்தது. அக்காலத்தே புத்த சைதன்யங்கள் (ஆலயங்களும் மடங்களும்) பீஹாரில் ஏராளமாக இருந்தன. அவற்றிற்கு விஹாரங்கள் என்று பெயர். விஹாரம் எனும் பெயரே பின்னுளில் பீஹார் என மருவி வழங்கலாயிற்று. விகாரங்கள் நிரம்பியிருந்த மாகாணத்தை பீகார் எனும் பெயர்கொண்டே அழைக்கிறோம். அசோக மகாராஜனது மௌரிய குலம் சாய்ந்த பின்னர், குப்த குலத்தார் தலை யெடுத்து, அங்கே வல்லரசு கொண்டனர். கிரேக்க தூதரான மகஸ்தினஸ் என்ன, சீனத் துறவியான யுவான் சுவாங் என்ன, இவர்கள் முன்னுளிலே அம் மாகாணத்தின் பெருமையைக் கண்டு வியந்து புகழ்ந்து பேசியுளர்.

அவ்விதம் சரித்திரச் சிறப்பு வாய்ந்தது பீகார் மாகாணம். அத்தகைய மாகாணமே நமது பாபு ராஜேந்திரரின் பிறப்பிடம். அப் பெருமான் பிறந்த வருஷமும் பெருமை பொருந்தியதே. காங்கிரஸ் மகாசபை தோன்றி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. அச் சபை தோன்றுவதற்கு முதல் வருஷம் அவர் தோன்றினர். வருஷாவருஷம், டிசம்பர்மாதக் கடைசியில், அம் மகாசபை கூடும். அந்த டிசம்பர் மாதம் மூன்றும் தேதியே அவர் பிறந்த தினம். அம் மகாசபையின் பொன் விழா நடக்கும் சமயம் பாபு ராஜேந்திரரே தலைவராக விளங்குகின்றார்!

பீகார் மாகாணத்தின் வட பாகத்திலே சாரன் என்று ஒரு ஜில்லா உண்டு. அந்த ஜில்லாவிலே முன்ஷி மகாதேவ சகாயர் என்று ஒருவர் இருந்தார். இவர் பிரபல மிராசுதார்; புராதனமான குடும்பத்தில் வந்தவர்; பரம்பரைப் பெருமை

உள்ளவர் ; காயஸ்தர் எனும் வகுப்பைச் சேர்ந்தவர். காயஸ்தரை வைசிய குலத்தார் என்பர் சிலர்; க்ஷத்திரிய குலத்தார் என்பர் வேறு சிலர். இது எவ்விதமாயினும், காயஸ்தர் மகா புத்திசாலிகள் ; தமிழகத்திலுள்ள கணக்கரைப் போல் புள்ளிக் கணக்கில் மிக்க வல்லவர்கள். வட இந்தியாவிலே உத்தியோக சாலைகளிலும் வர்த்தக ஸ்தலங்களிலும் அவர்களே மிகவும் பிரபலம் வாய்ந்தவர்கள்.

மகாதேவ சகாயருக்கு ஐந்து குழந்தைகள். அவர்களில் பாபு ராஜேந்திரப் பிரஸாதே கடைக்குட்டி. 1884-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் மூன்றாந் தேதி அவர் ஜனனமானார். ஒன்பதாவது வயதில் பள்ளிக்கு வைத்தார்கள். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது பழமொழி. குழந்தைப் பருவத்திலேயே, ராஜேந்திரர் மிகவும் புத்திசாலியாக விளங்கினார். ஒருதரம் படித்தாலும், சொல்லிக் கொடுத்தாலும் போதும். விஷயமெல்லாம் மனத்தில் நன்கு பதிந்துவிடும். எல்லா வகுப்பிலும் அவருக்கே முதன்மை ஸ்தானம். அது கண்டு ஆசிரியரும் பெற்றோரும் ஆச்சரியம் அடைந்தனர். இதர பையன்களும் பிரமித்தார்கள். அவருக்கு மூளை வலி மிகுதியே ; உடல் வலியோ மிகவும் குறைவு. பார்வைக்கு நோயாளிபோல் இன்றும் தோன்றுவார். ஆயினும் படிப்பிலே சோர்வுகிடையாது ; ஓடி ஆடுவதிலும் குறைச்சல் இராது.

ராஜேந்திரர் குழந்தையாக இருந்தபொழுது, பீகார் மாகாணம் வங்காளத்துடன் இணைந்திருந்தது. பொதுவாக பீகார் வாசிகள் கள்ளம் கபடு இல்லாதவர்கள் ; 'அப்பாவிகளே' போல் இருப்பார்கள். சுறுசுறுப்பும் சூடிகையும் அவர்களிடம் காணப்படா. வங்காளிகளோ குருகுருப்பும் படபடப்பும் வாய்ந்தவர்கள். பரம அறிவாளிகளும் ஆவர். ஆதலின் பீகாரிகள் என்றால் அவர்களுக்கு இளப்பம். 'பீகாரிகள் படிப்பில் சோடை' என்பதே பலரது அபிப்பிராயம். இந்த

நிலையில் கல்கத்தா சர்வ கலாசாலையின் பிரவேச பரீட்சையில் ராஜேந்திரர் (1902-ம் ஸ்ரீ) முதல் பையனாக விளங்கினர். அன்றளவும் சரி, அதற்குப் பின்பும் சரி, பீகார் மாணவரெவரும் அவ்விதம் முதன்மையாக விளங்கியது கிடையாது.

அது கண்டு, வங்காளிகள் வியந்தார்கள்; அத்தி பூத்தது போல் இருக்கிறதே என்றும் ஆச்சரிய மடைந்தனர். பீகாரில் பிரசுரமாகும் 'ஹிந்துஸ்தான் ரிவ்யூ' எனும் மாத சஞ்சிகை அப்போது பின்வருமாறு எழுதியது :—

" வாலிப ராஜேந்திரர் எவ்விதத்திலும் ஏற்றம் படைத்த மாணவர்; சர்வ கலாசாலையிலும் அவர் இவ்விதமே சிறந்து விளங்குவார் என்று எதிர்பார்க்கிறோம். காய்க்கும் மிடுக்கு படரும் பொழுதே தெரியும் அல்லவா? அதன்படி பார்த்தால், பிற்காலத்திலே ராஜேந்திரருக்குப் பெரும்பதவிகள் பல கிட்டுமெனக் கருதுகின்றோம். சுக ஜீவியாக இருப்பாரேயானல், அவருக்குக் கிட்டாத பதவி எதுவும் இராது. மாகாண ஹைகோர்ட்டிலே நீதிபதி பதவி ஒருநாள் அவருக்குக் கிடைக்கலாம். பம்பாய் வாசியான சந்தாவர்க்கர் என்பார், லாகூர் காங்கிரஸ் மகாசபையில் அக்கிராசனம் வகித்திருந்த காலையில், நீதிபதிபதவி கிடைக்கப் பெற்ருர் அன்ருே? அவ்விதம் ராஜேந்திரரும் பெறுவார். "

இவ்விதம் அம் மாதசஞ்சிகை 1902-ஆம் ஆண்டில் சோதிடம் கூறியது. ஒத்துழையா இயக்கம் ஆரம்பிக்கு முன், காங்கிரஸ் மகா சபையில் அக்கிராசனம் வகித்தவர்களில் பலருக்கும் அரசாங்கத்தில் உயர் பதவி கிடைத்தது பிரசித்தம். ராஜேந்திரருக்கும் அவ்விதம் கிடைக்குமென அச்சஞ்சிகை கூறியது இயல்பே. ஆயினும், ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்தபின், காங்கிரஸ் மகா சபையின் அக்கிராசனர் பலருக்கும் (அரசர் பெருமானது விருந்தினராகச்)

சிறைவாசமான உயர் பதவியே கிட்டியது. இனி, அப்பத்திரிகை கூறிய வண்ணம், பாபு ராஜேந்திரப் பிரஸாதர் காங்கிரஸ் அக்கிராசனரானர். தேச மக்கள் மனமுவந் தளிக்கும் சிறந்த பதவி இதனினும் வேறு உளதோ ?

பிரவேசப் பரீட்சையில் தேறிய பின்னர், கல்கத்தா பிரஸிடென்ஸி கலாசாலையில் சேர்ந்தார் நமது ராஜேந்திரர். எப். ஏ., பரீட்சையிலும் முதலாவதாகத் தேறினர். பி. ஏ., பரீட்சையிலும் அப்படியே. பின்பு எம். ஏ., வகுப்பில் சேர்ந்தார் ; சட்ட பரீட்சைக்கும் படித்தார் ; எம். ஏ., பரீட்சையில் 1907-ஆம் ஆண்டு தேறியபோதிலும், சட்ட பரீட்சையில், உடனே பட்டம் பெற முடியவில்லை. காரணம், தந்தை காலகதி ஆனதுபோலும். 1910-ஆம் ஆண்டில் பி. எல்., பட்டமும் பெற்ருர். இத்துடன் அவருடைய கலாசாலைப் படிப்பு முடிந்த தென்னலாம்.

3. வாலிப ஊழியம்

நட்பு, தயை, கோடை, இவை பிறவிக்குணம் என்பர் பெரியோர். தொண்டும் தியாகமும் அவ்விதமே பிறவிக் குணங்களாம். வாலிபம் முதலே, தொண்டு புரியவும் தியாகம் செய்யவும் ராஜேந்திரருக்குச் சிந்தை பிறந்தது. மாணவரில் சிலர் சதா புத்தகத்தைக் கட்டிக் கொண்டழுவர்; சிலர் கூத்திலும் கேளிக்கையிலும் கருத்துக் கொள்வர். ராஜேந்திரர் அவ்விதம் இருக்கவில்லை ; மற்று, அறிவு வளர்ச்சியில் ஆர்வம் கொண்டார்.

புத்தகப் படிப்புடன் உலகஞானப் படிப்பையும் பெற முயன்ருர் ராஜேந்திரர். மாணவர் சங்கங்களை ஏற்படுத்தினர் ; தர்க்கமும் வாதமும் நடக்கும் கூட்டங்களைக் கூட்டினர் ; தாமும் பேசினர் ; பிறரையும் பேச வைத்தார். பீகார்

மாணவர் என்றால், அந் நாளில் மிகவும் இளப்பம் என்று முன்பே சொன்னோம். கலாசாலைப் படிப்பை நாடி, பீகார் மாணவர் பலர் கல்கத்தாவுக்குப் போக நேர்ந்தது. அந் நாளில் கல்கத்தாவே இந்தியாவின் தலைநகரம். படிப்பை நாடி வரும் பீகார் மாணவர் அந்நகரிலே வேற்றுமுகங்கண்டு கஷ்டப்படலாயினர். அது கண்ட ராஜேந்திரர் அங்கே பீகார் மாணவர் சங்கம் ஒன்று கண்டார்; புதிதாக வரும் மாணவருக்கு இட வசதி, சாப்பாட்டு வசதி இவை தேடித் தந்தார்; பீகார் மாணவருக்குள் ஒற்றுமையும் உள்ளன்பும் உண்டு பண்ணி ஊழியம் புரிந்தார்.

1906-ம் ஆம் ஆண்டில் அவர் பி. ஏ., பட்டம் பெற்றார் அல்லவா? அதற்கு முன்பு, வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார் ராஜப்பிரதிநிதியான லார்டு கர்ஸன். அதனால் தங்களுக்கு மிக்க தீமை நேருமென வங்காளியர் எண்ணினர்; ஆதலின், வங்காளப் பிரிவினையை ரத்து செய்ய வேண்டுமென வேண்டிக்கொண்டனர். அரசாங்கம் அப்போது அதனை மதிக்கவில்லை. உடனே அனைவரும் ஒரு முகமாகத் திரண்டு நின்று பெருங் கிளர்ச்சி செய்தனர்; அன்னியநாட்டுத் துணிகளையும் சாமான்களையும் அறவே விடுத்து, நாட்டுத் துணிகளையும் சாமான்களையுமே வாங்க வேண்டுமென்று சபதம் பூண்டனர்; அன்னிய ஆடைகளைப் பலர் மலைபோல் குவித்துக் கொளுத்தினர். அதனால் நாட்டு வேஷ்டியிலும் பொருள்களிலும் ஜனங்களுக்குள் மிக்க அபிமானம் ஏற்பட்டது.

அக் கிளர்ச்சிக்கு மூலஸ்தானம் கல்கத்தாவே. ராஜீயத் தலைவர்களும் சமூகத் தலைவர்களும் தினம் கூட்டம் கூட்டி, அரசியல், பொருளாதாரம் இவற்றைக் குறித்துப் பிரசங்கம் செய்துவந்தனர். அக்கிளர்ச்சியின் அதிர்ச்சி நம் தமிழகத்திலும் தாக்கியது. எனவே, அதன் தலைமை

ஸ்தானத்திலிருந்த பாபு ராஜேந்திரர் அதில் ஈடு படுதல் இயற்கையே. அக் கிளர்ச்சியில் அவர் மூழ்கிவிட்டார்; அத்துடன் பீகார் மாணவரையும் ஈடுபடச் செய்தார். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் அவர் வேறெதையும் கவனிக்கவில்லை. சுருங்கச் சொன்னால், படிப்பை மறந்தார்; புத்தகத்தைக் கட்டி வைத்தார்; சரீர சுகத்தையும் விடுத்தார். இந்த உழைப்பு ஒன்று; தந்தை காலகதியானது ஒன்று; இரண்டும் கூடிக்கொள்ளவே, சட்ட பரீட்சையில் அவர் உடனே பட்டம் பெற முடியாது போயிற்று. எம். ஏ., பரீட்சையில் முதன்மையாகத் தேருது போனதற்கும் அதுவே காரணமாகும்.

பொதுவாக வங்காளிகளிடம் ஒரு விசேஷம் உண்டு. மேனுட்டு நாகரிகம், கல்வி, பண்டங்கள் இவற்றில் முதன் முதல் மோகங்கொண்டவர்கள் அவர்களேயாம். அப்பால் அம்மோகத்தை உதறித்தள்ளி, சுதேசியக் கிளர்ச்சியும் சுதந்திர இயக்கமும் உண்டுபண்ணி, முன்னணியில் நின்றேரும் அவர்களே. ஓடும் பாம்பை அச்சமின்றி மிதிக்கும் இள வங்காளியர் சுதேசிய இயக்கத்தில் சொக்கியிருந்தனர். அவர்களுடன் பாபு ராஜேந்திரர் நெருங்கிப் பழகவே, பீகார் மாணவர் அனைவரையும் ஒன்று சேர்த்து, ஊக்கம் அளிக்க வேண்டுமென அவருக்கு உறுதி பிறந்தது: அவ்விதமே பீகார் மாகாண மாணவர் மகாநாட்டைக் கூட்டினர். அம் மகாநாடு ஆண்டுதோறும் வெகு சிறப்பாக நடந்துவந்தது. அதனைப் பின்பற்றியே இதர மாகாணங்களிலும் மாணவரின் மகாநாடுகள் கூடலாயின. பீகார் மாகாண ராஜீய மகாநாடு கூடுவதற்கும் அதுவே காரணமாம்.

அந் நாளிலே, தமது பிள்ளைகளை, லண்டனுக்கு அனுப்பி, ஐ. ஸி. எஸ்., பரீட்சையில் தேறச் செய்து விட்டால், அதுவே பரம பாக்கியம் என்று பலரும் எண்ணி

யிருந்தனர். அவ்விதமே பாபு ராஜேந்திரரின் குடும்பத் தாரும் ஆவல் கொண்டனர். ராஜேந்திரருக்கு அதில் மனம் செல்லவில்லை. ஆனால் பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும் பினால் ஏராளமான பணம் சேர்த்து, ஏழைகளுக்கு உதவ லாம், இஷ்டப்படி தேச சேவை செய்யலாம், என்பதே அவர் கருத்து. முடிவில், பல காரணங்களால், அந்த ஆவல் கைகூடாமல் போயிற்று.

எம்.ஏ., பட்டம் பெற்றதும், அவர் பீகாருக்குத் திரும் பினார். அங்கே முஸபர்பூர் நகரில் ஒரு கலாசாலையிலே பேராசிரியர் வேலை கிடைத்தது. ஒரு வருஷம் போல் ஆசிரியராக அவர் அமர்ந்திருந்தார்; மீண்டும் கல்கத்தா வுக்கே போனார்; அங்கே சட்ட பரீட்சையில் உயர் பட்டம் பெற்று, ஹைகோர்ட்டில் வக்கீல் உத்தியோகம் பார்க்க லானார்.

---

4. தியாகத் திருவாசகம்

தேச ஊழியரின் திலகமாய் விளங்கிய ஒருவர் கோபால கிருஷ்ண கோகலே. ஆயுள் அளவும் தேச ஊழியமே புரியும் விருப்பமுள்ளோரைத் திரட்டி, இந்திய ஊழியர் சங்கம் என்று பூனா நகரில் ஒரு சங்கம் ஏற்படுத்தி யுள்ளார். அதில் சேருவோருக்கு அரை வயிற்றுச் சாப் பாட்டுக்குரிய திரவிய சகாயம் கிடைக்கும். அதைக்கொண்டு அவர்கள் திருப்தி யடைந்து, காலமெல்லாம் சமூக சேவை செய்தல் வேண்டும். அவ்விதம் பலர் இன்றும் செய்து வருகின்றனர்.

பீகாரிலிருந்து இரண்டோர் இளைஞரைத் தேடியடைய வேண்டுமென்று 1910-ஆம் ஆண்டில் கோபால கிருஷ்ணர்

ஆவல் கொண்டார். பாபு ராஜேந்திரப் பிரஸாதே பெரிதும் ஏற்றவர் என்று பலரும் சொல்லினர். உடனே அவர் நமது ராஜேந்திரருக்கு எழுதினர்; நேரிலும் தருவித்துப் பேசினர். ராஜேந்திரருக்கு அச் சங்கத்தில் சேர அடங்கா ஆசை பிறந்தது. அப்போது மகாதேவ சகாயர் உயிரோடு இருக்கவில்லை. தமையனாரான மகேந்திரப் பிரஸாதின் பாது காப்பில் இருந்துவந்தார் ராஜேந்திரர். ராஜேந்திரரை முன் னுக்குக் கொண்டுவந்த பெருமை மகேந்திரரையே சேரும். தமையன் பிதாவைப் போல்வான் என்பர் பெரியோர். மகா தேவருக்குப் பின், மகேந்திரரையே தந்தையெனக் கருதி பய பக்தி விசுவாசத்துடன் நடந்துவந்தார் நமது கதாநாயகர். ஆதலின், அண்ணனுக்குக் கடிதம் எழுதி அனுமதி கேட் டார். மகேந்திரர் சம்மதி தரவில்லை. ‘தந்தை சொல் மிக்க மந்திர மில்லை’ அல்லவா? இந்திய ஊழியர் சங்கத்தில் ராஜேந்திர பாபு சேரமுடியவில்லை. அது சமயம் தமைய னுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தால், ராஜேந்திரரின் குணாதிசயமும் மனப்போக்கும் நன்கு புலப்படும். அக் கடிதம் ஈதாகும்:—

“எனது பிரிய சோதர!

இரவும் பகலும் தங்களுடன் கூட இருக்கும் நான், தங்களுடன் கடிதமூலம் பேசுகின்றேன். இது ஆச்சரிய மாகவே இருக்கும். கடிதமூலம் பேசுவதற்கான கார ணங்கள் உண்டு. தங்களுடன் நேருக்கு நேராக நின்று, என் மனத்தை விண்டு காட்ட வேண்டுமென்று நெடுநேரம் எண்ணிப் பார்த்தேன். நானோ சங்கோசி; ஆதலின் நேர் நின்று பேச, என் மனம் துணியவில்லை. ஆர அமர ஆலோசனை செய்தே, விஷயத்தை இங்கு வரைகின்றேன். இது சத்தியம்.

கனம் கோபால கிருஷ்ண கோகலேயை இருபது தினங்களுக்கு முன் சென்று பார்த்தேன். இது தங்களுக்கு ஞாபக மிருக்கும். இந்திய ஊழியர் சங்கத்தில் சேருமாறு அவர் எனக்குச் சொன்னார். அவ்விதம் செய்ய இயலுமா, நடைமுறையில் அது சாத்தியமா, என்று அன்று முதல், சதா சிந்தனை செய்துவந்தேன். இருபது நாளாக இடைவிடாது யோசனை செய்ததில், தேச ஊழியத்தில் ஈடுபடுதலே சிறந்ததெனத் தோன்றியது.

சுகவாழ்வும் சிறப்பும் எய்த, என்னையே நம் குடும்பத்தார் நம்பியுளர். எனவே எனது யோசனை கண்டு, தங்கள் மனம் திடுக்கிடும். இதனை நன்கு அறிவேன். மேலும், குடும்பத்தார் தங்கள் கதியைத் தாங்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று நான் விலகிவிடின், நம் குடும்பம் பெரிதும் கஷ்டப்படும். இதுவும் எனக்குத் தெரியும். ஆனால், என் சோதர! குடும்பக் கடமையினும் மகத்தான அழைப்பொன்று என் மனத்தகத்தே உதித்துளது. கஷ்டத்திற்கும் சங்கடத்திற்கும் தங்களை ஆளாக்கிவிட்டு, நான் பிரிந்து போதல் நன்றியற்ற செயலா யிருக்கலாம்.

எனினும், இது காரணமாக நம் இருவருக்கும் மனக் கசப்பு தோன்றுதெனவே நினைக்கின்றேன். பரஸ்பரம் நம் இருவருக்குமுள்ள அன்பும் ஆசையும் சாமானியம் அன்று. அந்த அன்பையும் பிரியத்தையும் கொண்டு, அல்ப அசௌகரியங்களை நாம் பொருள்படுத்தாதிருக்க முடியும். குடும்பத்தைத் தாங்களே பாதுகாத்து வருகிறீர்கள், எங்கள் அனைவருக்கும் இனிய உதவி செய்கிறீர்கள், என்பதுபற்றி நான் தங்களை நேசிக்கவில்லை. தாங்களும் சரி, தம்பி இருக்கிறான், தக்க வயது வந்துவிட்டது, குடும்பத்திற்கு வேண்டிய வரும்படி தேடித் தருவான், என்பதுபற்றி என்னை நேசிக்கவில்லை. மற்று, நம் இருவருக்கும் உள்ள அன்போ உயர்தர

மானது. ஒருவருடைய நெறிப்பிசகினல், எவ்வித அசெள கரியமோ சுகக்கேடோ நேர்ந்தபோதிலும், நமது அன்புக்கு ஒரு நாளும் அழிவு வராது. அந்த அன்போ இன்னும் ஓங்கி உறுதிகொள்ளும், ஒப்புயர்வற்றதாகவும் ஆகும் என்பதே என் நினைப்பு.

ஆதலின், முப்பது கோடி மக்களின் நலத்தை மதித்துத் தியாகம் செய்யும் வண்ணம், தங்களுக்கு யோசனை சொல்லுவேன். கோகலேயின் சங்கத்தில் சேர்வதால், என்னைப்பற்றின மட்டில் யாதொரு தியாகமும் இல்லை. எத்தகைய நிலையாயினும், அதற்கு ஏற்றவாறு நடந்துகொள்ளும் வண்ணம் பழக்கமடைந்து விட்டேன். இந்தப் பழக்கம் நன்மையோ தீமையோ, எவ்விதமிருப்பினும் சரி, அக்கறை இல்லை. எளிய வாழ்க்கையும் கொண்டுள்ளேன். எனவே விசேஷமான செளகரியத்திற்குரிய யாதோர் ஏற்பாடும் அவசியமில்லை. சங்கத்திலிருந்து கிடைக்கும் பணம் என் வாழ்வுக்குப் போதுமானதே.

நான் அச் சங்கத்தில் சேர்தல், தங்களைப்பற்றின மட்டில் பெரிய தியாகமேயாம். ஏராளமான வருமானம் தேடித் தருவான் என நீங்கள் அனைவரும் என்னை எதிர்பார்த்திருக்கிறீர்கள். அந்த எண்ணமெல்லாம் ஒரு கணத்தில் மண்ணுகிவிடும். என்ன செய்வதெனத் தெரியாமல், நீங்கள் எல்லோரும் திகைப்பீர்கள். சோதர! கிராமத்திலே குடும்பத்துக்குக் கொஞ்சம் சொத்து இருக்கிறது. நானும் ஒரு வேலையில் அமர்ந்தால், கொஞ்சம் பணம் வரும், அதனல் ஜனசமூகத்திலே நமது குடும்பத்தின் நிலையும் அந்தஸ்தும் உயரும். இது உண்மையே.

ஜன சமூகத்திலோ பணம் படைத்தவனே பெரியவன்; பெருமையும் அடைகிருன்; பெருந்தன்மையான மனம் படைத்தவன் அவ்விதம் சிறப்பு எய்தான். இவற்றை

எல்லாம் அறிவேன். ஆயினும் என்ன? நிலயற்ற உலகம் இது. தோன்றுவனவெல்லாம் மறைந்து போம். செல்வம், பதவி, பெருமை எல்லாம் அப்படியே. பணம் பெருகப் பெருக, ஆசையும் தேவையும் அதிகரிக்கும். பொன் இருந்தால் போதும், திருப்தியாக இருக்கலாம் என்று மாந்தர் பலரும் நினைக்கின்றனர்.

உண்மையில் போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து. ஆனந்தம், சுகம், என்பன மனத்தைப் பற்றியன. இரண்டொரு காசுள்ள ஏழை மனிதன் இலட்சாதிகாரியை விட மிகவும் திருப்தியாக இருப்பான். எனவே, வறுமையைக் கண்டு நாம் வெறுக்க வேண்டாம். உலகிலே மகாபுருஷர் என்போ ரனைவரும் பரம ஏழைகளாகவே இருந்துளர். பணம் இல்லாததனுல், ஆரம்பத்தில் அவர்களைப் பலரும் பரிகசிக்கலாம்; அலட்சியமாகவும் நினைக்கலாம். அங்ஙனம் பரம புருஷரை இலேசாக எண்ணிய அனைவரும் எங்கே? மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணுகி விட்டனர். அவர்களைப் பற்றிய நினைப்போ ஞாபகமோ ஒருவருக்கும் கிடையாது. ஏழையென்று எண்ணப்பட்ட பரம புருஷர் அனைவரும் கோடிக் கணக்கான மக்களின் மனக் கோயிலில் குடிகொண்டிருக்கின்றனர்.

ஆதலின் பிறரது ஏச்சையும் பேச்சையும் நாம் பொருள் படுத்த வேண்டியதில்லை. எள்ளிப் பேசுவோருக்குப் பெருந்தன்மையான மனது கிடையாது. எடுப்பான சிந்தையும் கிடையாது. பாரபுத்தியும் பெருந்தன்மையும் படைத்த ஏழைகளோ அவர்களைக்கண்டு, "அந்தோ! என்ன அற்ப புத்தி இவர்களுக்கு! பாரபுத்தி இவர்களுக்கு வாராதா? பரிதாபம்! பரிதாபம்!!" என்று நினைத்திரங்க நேரும்.

பிரிய சோதர! வாழ்விலே எனக்கு ஏதேனும் ஆசை இருக்குமாயின், அது இதுதான். தேசத்திற்கு ஒரு சிறி

தேனும் தொண்டு புரிய வேண்டும். இத்தகைய ஆசை, பயிற்சிப் பிசகினுல் வந்ததோ என்று சிலர் நினைக்கலாம். பரோபகாரம் புரியவேண்டும். ஊருக்கு உழைக்கவேண்டும், உத்தமனுக விளங்கவேண்டும் என்னும் உயர்ந்த கருத்துக் களை முதன்முதல் எனக்குப் புகட்டியதும் வழிகாட்டியதும் தாங்களே யன்றே ?

மேல் படிப்புக்காக நான் சீமை செல்லவேண்டும் என்று முன்பு பேச்சு நடந்தது. அப்போது தாங்கள் என்ன நினைத் தீர்களோ அறியேன். எனக்கோ, ஐ. ஸி. எஸ்., பரீட்சை யில் மோகமே பிறக்கவில்லை. ஏனென்றுல் அப் பரீட்சை கொடுத்துத் திரும்பினுல், இஷ்டப்படி நான் உழைக்க முடி யாதுபோம். அந்தச் சமயம் நான் என் மனத்தில் உள்ள தைத் தங்களுக்கு விண்டு சொன்னேன். தாங்களும் தங் களது உட்கருத்தை ஒளியாது உரைத்தீர்கள்.

இப்போது அத்தகைய மற்ருெரு சந்தர்ப்பம் வாய்த் துளது. தைரியமாக இருங்கள்: என் கருத்தின்படி நடக்-கச் சம்மதி தாருங்கள். தங்களுக்குச் சம்மதமில்லை என்று நான் கண்டுகொண்டால், அதற்காக வருந்துவேன் ; ஆனுல் ஆச்சரியம் அடையமாட்டேன். வருங்காலத்தில் இவன் குடும்பத்தைத் தாங்குவான், பாதுகாப்பான் என்று நீங்கள் எல்லோரும் நம்பியிருக்கிறீர்கள். அது பற்றித்தான் நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்களோ ? அங்ஙனமாயின் என்ன சின்ன புத்தி இது, என்று என் மனம் ஒடியும். நான் தங்களைப் பெரிதும் வேண்டிக்கொள்ளுகிறேன். என்னை ஏமாறிப் போகும்படி செய்யாதீர்கள். என்னையே நான் வஞ் சித்துக் கொள்ளக் கூடாது.

தன்னையே வஞ்சித்துக்கொள்ளும் ஒருவன், பிறரிடம் எங்ஙனம் உண்மையாக நடக்க முடியும் ? இப்பொழுது தாங்கள் என்னைத் தடுத்தால், என் வாழ்வு முழுதும் சங்கட

மாகவே இருக்கும். வக்கீல் தொழிலில் நான் வெகு பணம் திரட்டுவதென்பதும் சந்தேகமாக முடியும்; என்னைச் சங்கட நிலைக்கு ஆளாக்கத் தங்களுக்கு விருப்பம் இருக்குமோ? இருக்கவே இருக்காது என்று எண்ணுகின்றேன்.

ஆசை, ஆசை என்று பேசினேன்! என்ன ஆசை? தேச மாதாவுக்கு, பாரதத் தாய்க்கு, ஒரு சிறிதேனும் தொண்டு புரியவேண்டும் என்பதே! வேறு ஆசை இருந்ததென்று வைத்துக்கொள்வோம். ஹைகோர்ட்டில் வக்கீலாக இருப்பதால், எனது ஆசை பூர்த்தியாக இடமுண்டோ? மாதம் நூற்றுக்கணக்கில் - ஏன் ஆயிரக்கணக்கிலும் - சம்பாதிக்கலாம். ஆயிரக் கணக்கிலும், இலட்சக் கணக்கிலும், கோடிக்கணக்கிலும் பணம் படைத்த பலரை நாம் பார்க்கவில்லையா? அவர்களை யாரேனும் சிந்துகிறார்களா? அவர்களைக் கண்டு நம்மில் சிலருக்குப் பரிதாபம் பிறக்கவில்லையா?

தேச சேவையில் இறங்கும் தன்மையைப் பார்ப்போம். எவ்வளவோ பிறருக்குப் பயன்படலாம், பெரும் கீர்த்தியும் பெறலாம். ஆண்டியிலும் சரி, அரசனிலும் சரி, கோகலேயைப்போல் செல்வாக்கும் பதவியும் பெருமையும் படைத்தோர் ஒருவராவது உண்டா? அந்த கோகலே பரம ஏழைதானே? அவரைவிட நமது குடும்பம் ஏழையோ? இலட்சக் கணக்கான ஏழைகள், மாதம் இரண்டு அல்லது மூன்று ரூபா கொண்டு காலம் தள்ளுகையில், நூற்றுக் கணக்கான ரூபா கொண்டு நமது குடும்பம் சுகமே வாழமுடியாதா? நான் அதிகம் சொல்ல வேண்டுமா?

தேச ஊழியம் என்றால், மனம்போனமட்டும், ஆசை கொண்டமட்டும், வேலை செய்யலாம். இதை எண்ணிப் பாருங்கள். மன அமைதியுடன் நான் தேச சேவகத்தில் புகுதல் வேண்டும். இதில் தங்களுக்குத்தான் தியாகம், தங்களுக்குத்தான் கீர்த்தியும்!

இனி, இந்திய ஊழியர் சங்கத்தில் சேருவதிலுள்ள வகை துறைகளைப் பார்ப்போம். எனது செலவுக்கென்று தாங்கள் எதுவும் கொடுக்கவேண்டியதில்லை. என் வாழ்வுக்கு வேண்டிய பணம் அச்சங்கத்திலிருந்து கிடைக்கும். குடும்ப சகாயத்திற்கென்றும் கொஞ்சம் பணம்கொடுப்பர். அதனைத் தங்களுக்கு அனுப்பி வருவேன் தவறாமல். அத் தொகை சிறியதாகத்தான் இருக்கும். எனினும், குடும்பத்திற்கு ஓரளவு உதவும். முப்பதாயிரம் எதிர்பார்த்த வகையில், முப்பதே கிடைப்பது கண்டு தாங்கள் திருப்தியடைய வேண்டியதுதான்.

குழந்தை குட்டிகளின் படிப்புக்கென்றும் அச்சங்கம் ஏதோ சகாயம் செய்யும். ஆகவே குழந்தைகளின் படிப்புக் கான செலவுக்குத் தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. குழந்தை குட்டிகளை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்; படிப்பும் புகட்டுவேன். தங்களுக்குக் கவலை வேண்டாம்.

பிரிய சோதர! எல்லாவற்றையும் எண்ணிப்பாருங்கள். தங்கள் கருத்து இன்னதென எனக்குத் தெரியவேண்டும். இந்த இருபது தினங்களாக இடைவிடாமல் எண்ணிப் பார்த் தேன். ஜன சமூகத்திலே கௌரவம், பதவி, அந்தஸ்து என்பன எல்லாம் மாயை. மனிதனுக்குப் பெருமை என்பது செல்வத்தின் அளவைச் சார்ந்ததன்று. மனத்தின் விரிவை யும் உயர்வையுமே சார்ந்ததாம். தங்களுக்குப் பெருந்தன் மையான மனம் உண்டு என்பதை நான் நன்கு அறிவேன்.

இனி, வேறுவிதமாக எண்ணிப் பார்ப்போம். திடீ ரென்று பிளேக் நோயால் இன்று நான் மாண்டுவிடுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது உள்ளதைக் கொண்டே குடும்பத்தையும், அதன் காரியங்களையும் தாங்கள் கவனிக்க நேருமன்றோ? அப்போது, இருப்பதைக்கொண்டு தாங்கள் திருப்தியடைய நேராதோ? ஞானம் என்பது எந்த மனித

னுக்கும் இருக்கும். ஞானபூர்வமாகப் பார்த்தால் இவ்வளவு தான் நமக்கு என்று நாம் திருப்தியடைய வேண்டாமா ?

நான் இல்லாமல் தாங்கள் வாழவேண்டுமென்று தெய்வம் விதிக்குமேயானால், தாங்கள் அதற்குக் கட்டுப்பட்டேயாகவேண்டும். ஆதலின், ஜனசமூகத்திலே சிறிது காலம் தாழ்ந்த நிலையில் இருப்போம் என்பதாக எண்ணி வறுமையை மேற்கொள்ளுங்கள். சுதந்திர சிந்தையும், பாரபுத்தியும் மனிதனுக்கு உண்டென்பதைத் தங்கள் மூலம் உலகம் உணர்ந்து கொள்ளுமாக! மகா புருஷர் உலகத்தில் இல்லாமல் போய்விடவில்லை என்பதையும் உலகோருக்கு உணர்த்துங்கள். பணம் ஒரு பொருட்டன்று, ஊழியமே பெரியது, என்று எண்ணும் மனிதர் உளர் என்பதையும் உலகறியச் செய்யுங்கள். லட்சோப லட்சக் கணக்கான , மக்களின் விசுவாசத்துக்குப் பாத்திரமாக விளங்குங்கள்; எல்லாவற்றிற்கும் மேலாகத் தங்கள் உடன் பிறப்பான எனது நன்றியறிவினுக்கும் இலக்காக இருங்கள்.

எனது முடிவைக் குறித்து என் மனைவிக்கும் எழுதியுள்ளேன். அன்னைக்கு எழுதத் துணிவு பிறக்கவில்லை. தள்ளாத வயதில் அன்னை திகைப்பாள் அன்றோ ?

இங்ஙனம்,

தங்கள் பிரியமுள்ள

ராஜேந்திரப் பிரஸாத்"

5. உள்ளங் கிழிதல்

தம்பி எழுதிய கடிதத்தை மகேந்திரப் பிரஸாத் பார்த்தார். அவ்வளவுதான் தாமதம். துக்கம் வந்து நெஞ்சை அடைத்தது. குடும்பத்தின் நினைவுகள் தோன்றி மனத்தை அலைத்தன. "தந்தையை இழந்தோம். குடும்ப பாரம் தலையில் சுமந்துளது. கவலையின்றிக் காலந்தள்ள வகையில்லை. குடும்ப வருமானமோ மிகவும் குறைவு. சமூகத்தில் உயர்நிலை யடையவேண்டாமோ? தம்பியுள்ளான், ஆலம் விழுதுபோல் தாங்குவான், என்று தேறுதல் கொண்டோம். எல்லாம் கனவாக முடிந்துவிடும் போலிருக்கிறதே. எல்லாவற்றிற்கும் மேலாக, ஈன்ற தாயோ படு கிடையாய்க் கிடக்கிறாள். நோய் தீரும் வழியைக் காணவில்லை. இந்நிலையில் தம்பியும் கைவிட்டுப் போகப் பார்க்கிறான்" என்று கண்ணீர் வடித்தார் மகேந்திரப் பிரஸாதர்.

அதுசமயம் ராஜேந்திரப் பிரஸாதும் தோன்றி, இந்திய ஊழியர் சங்கத்தில் சேரவேண்டுமென்று கூறி அழலானார். தமையன் முகத்தைப் பார்த்ததும், ராஜேந்திரருக்கு மனம் இளகி விட்டது; அன்பு பெருக் கெடுத்தது; பாசமோ மேலோங்கியது. தாயின் தள்ளாத வயதையும், கொடு நோயையும் எண்ணி, அண்ணன் மகேந்திரப் பிரஸாதுக்கு மற்றொரு கடிதம் விடுத்தார். அது யாதெனில் :—

"எனது பிரிய சோதர!

என்ன எழுதுவதென்றே எனக்குத் தெரியவில்லை. ஒரே ஒரு விஷயத்தில்தான் பெருமை கொள்வேன். அது யாதெனில், யாருக்கும் எப்போதும் துன்பம் செய்யாதிருப்பதேயாம். எப்பொழுதேனும் யாருக்காவது துன்பம் செய்யின், உடனே அதுபற்றி அழுது புலம்புவேன். தங்

களுக்கோ, நமது பிரியமுள்ள தாயாருக்கோ, துயர் இழைக்க நான் ஒருபோதும் கருதியது கிடையாது.

இந்திய ஊழியர் சங்கத்தில் சேரவேண்டுமென்று நான் எழுதியபொழுது, அதுவே முடிவான தீர்மானம் என்பதில்லை. தங்கள் வார்த்தையை நான் ஒருக்காலும் தட்டி நடந்தது கிடையாது. ஆண்டவன் அருளால் இனியும் தட்டி நடவேன். தந்தை இல்லாப் பிள்ளையென நான் ஒருபோதும் துக்கம் கொண்டதில்லை. ஏனெனில், தாங்கள் எனக்கு மூத்த சோதரர் என்பது மட்டுமன்று; தந்தையும் ஆவீர். தங்களுக்கு ஏதேனும் துன்பம் தருவேனே யானால், நான் மாபாவி யாவேன்.

எனது யோசனையைக் குறித்து, தாங்கள் மனம் விட்டுப் பேசவேண்டும் என்றே விரும்பினேன். அவ்விதமே தாங்கள் எதையும் ஒளிக்காமல் உரைத்து விட்டீர்கள். அதில் எனக்கு மிகவும் திருப்தியே. தங்கள் முகத்தைப் பார்த்த காலையில், என் மனம் படாதபாடு பட்டது. தங்களது வார்த்தையை எப்பொழுதேனும் நான் தட்டி நடப்பின், நன்றி கெட்ட பெரும் பாதகம் என்னைச் சூழ்ந்துகொள்ளும். தங்கள் சொற்படி நடப்பதிலேயே எனக்கு எப்பொழுதும் ஆனந்தம். இனியும் அதில்தான் ஆனந்தம் காண்பேன்.

அண்ணா! நிச்சயம் இது. தங்கள் தம்பி, தங்கள் அனுமதி இல்லாமல், அல்லது தங்கள் மனத்துக்கு மாறாக, எதுவும் எப்பொழுதும் செய்யான். பின்காலத்திலே வாழ்நாள் முழுதும் சங்கடப்பட்டுக்கொண்டே இருப்பேன் என்றும் தாங்கள் நினைக்கவேண்டாம். திடீரென்று ஒன்றில் மோகங்கொள்ளும் இளைஞன் அல்லவா நான்? இளமைக்குரிய குறைகள் அனைத்தும் என்னிடம் நிரம்பியுள. தாங்களோ என்னிடம் பேரன்பு பூண்டவர்கள்; பெரும் பாசமும் வைத்திருக்கிறீர்கள். இத்தகைய தாங்கள் என்னை

மன்னிக்காவிடின், வேறு யார் மன்னிப்பர்? குழந்தைப் பிள்ளைக்குரிய சின்ன புத்தி கொண்டு தங்களுக்கு மன வருத்தம் கொடுத்தேன். என்னைத் தாங்கள் பெரிய மனது பண்ணி மன்னித்தல் வேண்டும்.

தங்களுக்குத் துயர் கொடுத்ததுபற்றி மிகவும் வருந்துகின்றேன். துயர் கொடுக்கவேண்டுமென்று எனக்கு எண்ணமே கிடையாது. என் மனத்தைத் திறந்து காட்ட வகை இல்லையே. தங்களுக்குத் துன்பம் கொடுத்ததுபற்றி எவ்வளவோ கண்ணீர் வடித்தேன்; எத்துணையோ அழுதேன்; இன்னும் எவ்வளவோ கண்ணீர் வடிப்பேன், அழவும் அழுவேன். நிச்சயம் இது.

எனது பிரிய தந்தைக்கு அனுவசியமான மனத்துயர் நேர நானே காரணமா யிருந்தேன்; அதனால் அவரது ஆருயிருக்கே உலை நேர்ந்தது. தந்தையின் ஸ்தானத்திலுள்ள தங்களுக்கும் அனுவசியமான துன்பம் கொடுத்துவிட்டேன். எவ்விதம் மன்னிப்பு வேண்டுவதென்றே எனக்குத் தெரியவில்லை. பிரியத்தின் மிகுதியினால், தாங்கள் எல்லாவற்றையும் மறந்துவிடுவீர்களாக. ஆயினும் தங்களுக்குத் துயர் இழைத்ததை என்னால் மறக்க முடியுமோ? ஒரு நாளும் முடியாது, முடியாது.

நெஞ்சை யொளித்த வஞ்சகம் இல்லை. நெஞ்சாரச் சொல்லுகின்றேன். சங்கத்தில் சேர்வதென்ற எண்ணம் பறந்துவிட்டது. ஆயினும் ஊருக்கு உழைக்கவேண்டும் என்னும் ஆசையை விட்டுவிட முடியுமா? எல்லாம் நான் கொண்ட படிப்பின் பயன்! நான் எங்கிருந்தபோதிலும் சரி, பிறருக்குத் துன்பம் எதுவும் செய்யாவிடின் சந்தோஷமாகவே இருப்பேன். என்னிடம் பாசமும் நேசமும் வாய்ந்த தாங்கள், எது சொன்னாலும், அப்படியே செய்வேன்; தங்களுக்கு ஒருபோதும் துயர் நேரச் சகியேன். ஏதோ என்னு

லான சமூக ஊழியம் செய்துவருவேன். நீங்கள் எல்லோரும் சந்தோஷமாக இருக்கப் பார்ப்பதே எனக்குச் சந்தோஷமாகும்.

இங்ஙனம்: தங்கள் அன்பன்,

ராஜேந்திரப் பிரஸாத்"

---

6. வக்கீல் தொழில்

பாபு ராஜேந்திரப் பிரஸாதர் 1911-ஆம் ஆண்டு கல்கத்தா ஹைகோர்ட்டில் வக்கீலாக அமர்ந்தார். உடனே மிகுந்த வருமானம் கிடைக்கத் தலைப்பட்டது. தொழில் தொடங்கியதும், யாருக்கும் அவ்வளவு வரும்படி கிடைத்தல் அருமை. பெரிய வக்கீல்களும் அவரது மிகுந்த வருமானங் கண்டு வியந்தனர். நாளடைவில், 'ஜூனியர்' வக்கீல்களிலே அவர் முதன்மை ஸ்தானம் பெறலானார். மேதாவிகள் நிரம்பிய கல்கத்தா ஹைகோர்ட்டிலே சிறிது காலத்திற்குள் அவ்விதம் சோபித்தல் அருமை.

வக்கீல் தொழிலில் இருந்துகொண்டே 1915-ஆம் ஆண்டில் எம். எல்., பரீட்சைக்குப் போனார். அதிலும் முதல் வகுப்பில் தேறினார். இதற்குள் 1916-ஆம் ஆண்டில் (பீகார் மாகாணத்தின் தலைநகரான) பாடலீபுத்திர நகரில் ஹைகோர்ட்டு ஒன்று ஏற்பட்டது. உடனே பாட்னாவுக்குத் திரும்பி அங்கே வக்கீல் வேலை பார்க்கப்போனார். பாட்னாவிலும் வக்கீல் உத்தியோகம் தொடங்கியதுதான் தாமதம். கட்சிக்காரர் வந்து குவிந்தனர்; வழக்குகள் வந்து நிரம்பின; வரும்படியும் பெருத்தது. வக்கீல் தொழிலிலே பொய்யை மெய்யென்றும், மெய்யைப் பொய்யென்றும், திரித்துக்கூறி வாதிக்க நேரும். இதற்கு அவர் இணங்கவில்லை. எனினும்

வழக்குகள் பெருத்தன. 'சின்ன' வக்கீல்களில் இவ்வளவு வரும்படியும் செல்வாக்கும் அடைதல் அருமை என்று அனைவரும் பேசினர். சகாக்களான இதர பெரிய வக்கீல்களும் புகழ்ந்தனர்; நீதிபதிகளும் மெச்சினர்கள்.

தொடர்ந்து வக்கீல் தொழிலை நடத்தியிருப்பின் மலை போல் செல்வம் குவிந்திருக்கும்; பாட்னு ஹைகோர்ட்டில் நீதிபதி பதவியும் கிட்டியிருக்கும். 'ஹிந்துஸ்தான் ரிவ்யூ' எனும் சஞ்சிகையின் சோதிடமும் பலித்திருக்கும். 1919-ஆம் ஆண்டிலே, ரௌலட் சட்டங் காரணமாக, காந்தியின் சத்தியாக்ரக இயக்கம் உதித்தது. அப்போது வக்கீல்களில் பலர் அவ்வியக்கத்தில் ஈடுபடலாயினர். இளமை முதல் தேசசேவையில் சிந்தைகொண்ட பாபு ராஜேந்திரர் அதில் ஈடுபடாதிருக்க இயலுமா?

வக்கீல் தொழிலில் மூழ்கி, ஏராளமான பணம் திரட்டுவதே வாழ்வின் லட்சியமென அவர் எங்ஙனம் நினைப்பார்? மக்களின் பொதுநலத்துக்குரிய காரியங்களிலும் கிளர்ச்சிகளிலும் முனையலானர். பாட்னு நகரிலே சர்வகலாசாலையொன்று ஏற்படுத்துவதற்கான சட்டம், டில்லி சட்டசபையில் தோன்றியது. அப்போது இந்தியா கவர்ன்மெண்டில் கல்வி மெம்பராக இருந்தவர் (காலஞ்சென்ற) ஸர். சங்கரன் நாயர். அச் சட்டமோ ஜனங்களுக்குப் பிடித்தமாயில்லை. அதில் பற்பல குறைபாடுகள் இருந்தன. பார்த்தார் ராஜேந்திரர்; சும்மா இருத்தலாகாது என்று தீர்மானித்தார்.

உடனே அச்சட்டத்தின் சீர்கேடுகளைக் குறித்து பத்திரிகைகளில் ஓயாமல் கட்டுரைகள் வரைந்துவந்தார்; தமது சகாக்களையும் சேர்த்துக்கொண்டு கூட்டங்கள்போட்டு, கண்டனம் செய்தார். அதனுல் மாகாணமெங்கும் கிளர்ச்சி வலுத்தது. வெகுஜனவாக்கு வானுர வளர்ந் தோங்கியது. அதன்மேல், வேண்டாச் சட்டத்தை அடிபிடி கட்டாயமாகத் தலை

யில் கட்டுவதில் பயனில்லை என்று அரசாங்கத்தார் கண்டு கொண்டனர். பின்பு ஜனங்கள் கோரியவண்ணம் அச்சட்டத்தில் பல திருத்தங்கள் ஏற்பட்டன. இதற்கு ராஜேந்திரரின் முயற்சியும் கிளர்ச்சியுமே முக்கிய காரணம்.

அத்துடன் அவர் நிற்கவில்லை. நடைமுறையில் அச்சட்டம் சரிவரப் பயன்படவேண்டும் என்றும் அவர் விரும்பினர். 1917-ஆம் ஆண்டிலே அதன் நிர்வாக சபையில் அவருக்குப் பதவி கிடைத்தது. சம்பளம் அதிகமாயிருந்தால், பலரும் எவ்விதம் இலகுவில் கல்விபெற முடியும்? ஆதலின், அதிகச் சம்பளமில்லாமல், கல்வி கிடைக்கவேண்டுமென அவர் வாதித்தார்; சர்வகலாசாலையில் அனுவசியமாக நீண்டகாலம் மாணவர் படிக்க நேருவது கூடாதென்று வாதாடினர்; பாடசாலைகளில் தாய்ப்பாஷையின் மூலமே போதனை நடக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். இதர அங்கத்தினரும் ஆதரவாக இருந்தனர். அவ்விதமெல்லாம் காரியம் நடக்கலாயிற்று.

அவரது உழைப்பையும் ஊக்கத்தையுங் கண்டு, அதிகாரிகளும் பிறரும் போற்றினர். வெறுங் கிளர்ச்சிக்காரன், கட்டின வீட்டுக்குப் பழுது சொல்வோன், என்று எவரும் நினைக்கவில்லை. உருவான ஆக்க வேலை செய்யும் அரிய ஊழியர் என்றே அனைவரும் மதித்தனர். நெடுக அந் நிர்வாக சபையில் இருந்திருந்தால், இன்னும் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்திருப்பார். இடையிலே ஒத்துழையா இயக்கம் ஓங்கிவிட்டது. ஆதலின், சர்வ கலாசாலையின் நிருவாக, ஆலோசனை சபைகளை விட்டுவிட்டு, அவர் வெளியேறலானர். அவர் வெளியேறியதைக் கண்டு, அதிகாரிகளிலும் பலர் உள்ளூர வருந்தினர்.

ஒத்துழையா இயக்கத்தின் பலனாக பீகார் மாகாணத்திலே, தேசீய சர்வகலாசாலை (பீகார் வித்தியா பீடம்) ஏற்

பட்டது. மாணவர்கள் இதில் வந்து குவிந்து, தேசிய முறையில் போதனையும் பயிற்சியும் பெற்றனர். அந்த வித்தியா பீடம் வளர்பிறைபோல் வளர்ந்து வந்தது. ராஜேந்திரரே அதற்கு உப தலைவராக (வைஸ் சான்ஸலர்) விளங்கினார். சில வருஷகாலம் வித்தியா பீடம் விளங்கி நின்றது. 1930-ஆம் ஆண்டிலே சுதந்திரப் போர் மும்முரமாக மூண்டதும், வித்தியாபீடத்தை அரசாங்கத்தார் கைப்பற்றிக்கொண்டு, அதனை மூடிவிட்டனர்.

---

7. ஏழை பங்காளன்

பீகாரை உலகறியச் செய்ததும், காந்தியையும் ராஜேந்திரரையும் சந்திக்கச் செய்ததும் சம்பரான் சம்பவமாகும். சம்பரான் என்பது பீகாரிலே ஒரு ஜில்லா. சண்பக ஆரண்யம் என்று அதற்குப் பெயர். துருவனது தபோவனம் அதுதான். வான்மீக முனிவரது ஆசிரமும் அங்குத்தான் இருந்தது. ஜனக மகாராஜனும் அங்கிருந்தே அரசாண்டு வந்தான். விராடநகரும் அதுவே என்பர். புராண வாயிலாகவும், சரித்திர வாயிலாகவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அது சிறப்பு வாய்ந்த இடம்.

இப்பொழுது அங்கே மாந்தோப்புகளே மிகுதி. 1917-ஆம் ஆண்டுவரையில், நீலிச்சாய உற்பத்திக்கு அதுதான் தாயகம். ஜர்மன் சாயச்சரக்கு வந்தபின்பே நீலிச்சாயம் தலை சாய்ந்துவிட்டது. என்றாலும் அவுரி சாகுபடிக்குக் குறைவில்லை. அங்குள்ள நிலங்களில் பெரும்பாகம் சாசுவத குத்தகையின் மீது ஐரோப்பியருக்குச் சொந்தம். விவசாயிகளோ ஒன்றும் அறியாத ஏழை இந்திய மக்கள்; வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பும் பேர்வழிகள்.

ஓர் ஏகர் நிலத்திலே ஆறில் ஒரு பாகம் அந்த விவசாய மக்கள் அவுரியைப் பயிரிட்டாகவேண்டும். அதுவே சட்டம். அவ்விதம் பயிரிடாது போனால், வந்துவிடும் அனர்த்தம். விதியே என்று ஏழை விவசாயிகள் பயிரிட்டு வந்தார்கள். வேலைக்கேற்ற வருமானம் கிடையாது. கெடுபிடிக்கு மட்டும் குறைவு இல்லை. இவ்விதம் ஆயிரக் கணக்கான விவசாய மக்கள் வாயில்லாப் பூச்சிகளைப்போல் கஷ்டப்பட்டுவந்தனர். "ஏழையின் சொல் அம்பலம் ஏறாது' அல்லவா? இரண்டொருவர் சிரத்தை கொண்டும் ஏழைகளுக்குக் கதி மோட்சம் பிறக்கவில்லை.

1916-ம் ஆு லக்ஷ்மணபுரி (Lucknow) காங்கிரஸ் மகா சபையில் அந்த விவசாயிகளிடம் அனுதாபம் காட்டுவதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. அதன்மேல் மகாத்மா காந்தி சம்பாரானுக்குச் சென்றார் நேரில் விஷயத்தை அறிய. மகாத்மாவை அழைத்துச் சென்றவர் ராஜகுமார சுக்லா என்பவர். ஏழை மக்களிடம் இவர் மிக்க அக்கறை கொண்டவர். அதன் பலனாக இவர் வீடு வாசல்கள் எதிரிகளின் செயலால் தீக்கு இரையாகிவிட்டன.

மகாத்மா காந்தியும் ராஜகுமார சுக்லாவும் நேரே பாடலீபுர நகரம் சேர்ந்தனர். ராஜேந்திர பாபுவின் ஜாகையில் தங்கலாமென சுக்லா எண்ணினார். காந்தியை அங்கே அழைத்துச் சென்றார். ராஜேந்திரர் அப்போது ஊரில் இல்லை. யாரோ வேற்று மனிதர் என்று ராஜேந்திரரின் வேலையாளர் அலட்சியமாக இருந்துவிட்டனர். கிணற்றிலே தண்ணீர் சேந்தப்போனார் காந்தி. வேலைக்காரர்கள் தடுத்துவிட்டார்கள். இதுவும் ஒரு பாடம் என்றே காந்தி கருதினார்; வேறில்லை.

பின்பு ஏழை விவசாயிகளின் நிலையை நேரில் அறிய விரும்பி, மகாத்மா சம்பரான் சென்றார். நூற்றுக் கணக்

கான விவசாயிகள் வந்து, தங்கள் குறைகளை எடுத்துக் கூறி ஓலமிட்டார்கள். முதலாளி என்றால், தொழிலாளிகளுக்கு உள்ளூர பீதிதான். ஆயினும் மகாத்மா காந்தியைக் கண்டவுடனே, ஏழைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அச்சம் அகன்றது; தைரியம் ஓங்கியது. தாராளமாக அனைவரும் வந்து உள்ள விஷயத்தை எல்லாம் உள்ளவாறு ஒன்றும் விடாமல் உரைக்கலாயினர்.

இதற்குள் ஐரோப்பிய குத்தகைக்காரருக்குள் பரபரப்பு ஏற்பட்டது. உள்ள விஷயமெல்லாம் அம்பலத்துக்கு வந்தால் கஷ்டந்தானே. குத்தகைக்காரர்களுக்கு அதிகச் செல்வாக்கு உண்டு. அதிகாரிகளுக்குத் தந்திமேல் தந்தி பறந்தது. சுருங்கச் சொன்னால், மகாத்மா காந்தி கைதி செய்யப்பட்டார். அவர்மீது கேஸ் நடந்தது. காந்தியோ சிறை செல்லத் தயாராக இருந்தார். பெரிய மனிதர்கள் பலரும் அவருக்குத் துணையாக இருந்தனர்.

அப்பெரிய மனிதர்களில் ராஜேந்திர பாபு ஒருவர். காந்தி சிறை சென்றுவிட்டால், ஒருவர்பின் ஒருவராகப் பலர் சிறை செல்வதென்றும், விவசாயிகளின் நிலைமையை ஆர அமர விசாரித்து அறிக்கை ஒன்று வெளியிடுவதென்றும் ஏற்பாடாயிற்று. தொண்டர்களும் தாமுமாக எதற்கும் தயார் என்றார் ராஜேந்திரர். இதர தலைவர்களும் உதவி செய்வதாக வாக்களித்தனர்.

வெகு ஜனவாக்கு வலுத்து வருவதையும், உண்மையில் ஏழை விவசாயிகளுக்குக் குறை உண்டென்பதையும், பீகார் மாகாண கவர்ன்மெண்டார் அறிந்துகொண்டனர். அதன்மேல் காந்தியின்மீது கேஸ் நடத்தாமல் அவரை விடுவித்தனர். தவிர, விவசாயிகளின் கஷ்ட நஷ்டங்களை ஆராய்ந்தறிய ஒரு கமிட்டியையும் நியமித்தனர். அக்கமிட்டியில் காந்தியும் ஒருவர். அவ்விதமே விசாரணை நடந்தது.

விசாரணையின் முடிவை ஆதாரமாகக் கொண்டு, விவசாயிகளின் கஷ்டத்தை நிவர்த்திக்க ஒரு சட்டம் பிறந்தது. அதனால் குறைகள் பல நீங்கின; விவசாயிகள் ஓரளவு ஆறுதல் அடைந்தார்கள்.

அப்போது ஆதி முதல் அந்தம் வரையில் மகாத்மா காந்திக்கு உடனிருந்து உதவியவர் பாபு ராஜேந்திரர். அது முதல், ராஜேந்திரரின் வாழ்க்கையில் ஒரு புதிய மாறுதல் உண்டாயிற்று. ஏழைகளுக்கு இரங்கி உழைப்பதே இஷ்ட சித்தி எனும் தெளிவும் ஏற்பட்டது. வாழ்க்கையும் மிக எளிய வாழ்க்கையாக மாறியது.

“விரஜ கிருஷ்ண பாபு, ராஜேந்திரபாபு ஆகிய இருவரும் இணையிலாத் துணைவர். அவ்விருவரின் பக்தியே பக்தி! அவர்களின் உதவி யில்லாமல் நான் ஒரு காரியமும் செய்திருக்க முடியாது. அவர்களின் சிஷ்யர்கள் அல்லது தோழர்களும் சதா எங்களுடன் இருந்தனர்” என்று மகாத்மாகாந்தி தமது சுய சரிதையில் எழுதியுள்ளார்.

சம்பரான் ஜில்லாவிலே ராஜேந்திரப் பிரஸாதின் துணை கொண்டு மகாத்மா செய்த ஊழியத்தின் பலன் ஈதாகும்:—“அங்கே தீவிரமான ஆக்கவேலை நடந்து வந்ததனால், அவுரி சாகுபடி அடியோடு நின்றுவிட்டது. நீலிச்சரக்கு செய்யும் பெரிய தொழிற்சாலைகளெல்லாம் அநேகமாக விற்கப்பட்டுப் போயின. சிறிய தொழிற்சாலைகளோ மறைந்துவிட்டன. விவசாயிகளோ முன்னம் இருந்ததைவிட இப்போது மிக்க தைரிய புருஷராகவும் சுய மதிப்புள்ளோராகவும் விளங்குகிறார்கள். இம்மட்டோ? ஏழை விவசாயிகளுக்கு உழைத்த தொண்டர் பலரும் இப்போது சிறந்த தேசத் தொண்டராகவும் துலங்குகின்றனர்.”

8. காந்தி போதம்

சண்பக ஆரண்யத்திலே ஆதி முதல் அந்தம் வரையில் மகாத்மா காந்தியுடன் இருந்து, ராஜேந்திர பாபு ஊழியம் புரிந்தார் அல்லவா? அப்போது, தாமும் பிறரும் கொண்ட போதத்தைக் குறித்து, ராஜேந்திரப் பிரஸாதர் எழுதியிருப்பது இது:—

" சம்பரான் அதிகாரிகள் மகாத்மா காந்தியைக் கைது செய்தது கேட்டு, ஆண்ட்ரூஸ் வந்து சேர்ந்தார். (அவர் மகாத்மாவின் உயிர்த் தோழராகி, அல்லும் பகலும் நம்மவரின் நலத்தில் நாட்டம் கொண்டவர் என்பது பிரசித்தம்.) காந்தியின்மீது கேஸ் நடத்தப் போவதில்லை என்று முடிவானதும், அவர் திரும்பிப்போக எண்ணினார். பிஜித் தீவிலுள்ள இந்தியரின் குறைகளைப் போக்க அங்கே போக வேண்டுமென்பது அவர் கருத்து. சம்பரானிலே ஐரோப்பியத் தோட்டக்காரரின் தொல்லையோ தீரவில்லை. ஆதலின் அவர் இங்கிருத்தல் (சம்பரான் ஜில்லாவில்) நலமென நாங்கள் பெரிதும் விரும்பினோம்.

" மகாத்மா காந்தி சொல்லும் வண்ணம் நடப்பதாக ஆண்ட்ரூஸ் சொன்னார். மாலையிலே மகாத்மாவிடம் அவ்விஷயத்தை அறிவித்தோம். அப்போது காந்தி கொடுத்த பதில் எங்கள் மனப் போக்கை முற்றிலும் மாற்றியது. 'ஐரோப்பியத்தோட்டக்காரருடன் போராட்டம் நேர்ந்திருப்பதால், ஐரோப்பியரான ஆண்ட்ரூஸ் உடனிருத்தல் நலமென நினைக்கிறீர்கள். அவ்விதமே நலமும் பலமும் தேடித் தரவோ, தேடிக்கொள்ளவோ கூடாது. அவ்விதம் நலமும் பலமும் வேண்டுமென விரும்புதல், நமது மனவலியின் குறைவுக்கு அறிகுறியாகும். ஆதலினால், அவர் உடனே

இங்கிருந்து போய்விடவேண்டும் என்பதே என் முடிவாம். அதுவே அவசியமும் ஆகும். அப்போதுதான், உங்கள் மனவலியின் குறைவு அகலும்' என்றூர் மகாத்மா காந்தி.

"'மேலும், பிஜித் தீவுக்குப் போவதினும் சம்பாரனில் இருத்தலே மிகவும் முக்கியமெனத் தோன்றினுல், ஆண்ட்ரூஸ் இங்கிருக்கட்டும். இவ் விஷயத்தில் ஒரு முடிவுகொள்ளுதல் அவருடைய பொறுப்பாம்' என்றும் காந்தி கூறினுர். முடிவில் ஆண்ட்ரூஸ் பிஜித் தீவுக்குச் செல்லவேண்டுமென்று முடிவாயிற்று. இது நிற்க,

"சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று மகாத்மா காந்தியுடன் பல சமயங்களில் நாங்கள் பேசுவோம். அப்போது அவர், 'என்ன இது! தெரியவில்லையா? சுயராஜ்ய ஊழியமே புரிந்து வருகிறேன்' என்று சொல்லுவார். அவரது வார்த்தையின் அர்த்த புஷ்டியை அப்போது நாங்கள் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனுல் இன்றே அதாவது சம்பரான் விவசாயிகளுக்கு ஊழியம் புரிந்து ஓரளவு அவர்களின் கஷ்ட நஷ்டத்தைப் போக்கிய பின்பே, அவரது வார்த்தையின் அர்த்த புஷ்டியை நன்கு உணரலானேம். ஏழை மக்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் உள்ள குறைகளைப் போக்குவதே சுயராஜ்ய சித்திக்கான ஊழியமென இப்போது நன்கு புலப்படுகின்றது.

"சம்பரானுக்குப் போகும் வழியிலே ஒரு கிராமத்தை மகாத்மா காந்தி பார்வையிட்டார். அங்குள்ள ஜனங்களின் நிலைமையையும், குழந்தைகளின் தன்மையையும், நேரில் பார்த்தார். பார்த்ததும், 'இந்த மக்களின் நிலையை உயர்த்தினுல்தான், நாம் சுயராஜ்யம் அடையலாம்!' என்று வற்புறுத்தினுர். உடனே எங்கள் மனத்தில் அவ் விஷயம் பதியலாயிற்று. ஏழை மக்களைக் கை தூக்கிவிட வேண்டுமானுல், ஊழியம் புரிவோரிடம் சத்தியம் வேண்டும், பயம்

என்பது இருத்தலாகாது, வறுமை விரதமும் இருத்தல் வேண்டும். இத்துறையில், இந்த உயர்ந்த லட்சியத்தில், அவர் எங்களுக்கு வழிகாட்டினார்.

"நானும் எனது சகாக்களும் பாடலீபுரத்தை விட்டு, சம்பரான் சேர்ந்த பொழுது, எங்களில் பலருக்கும் கை கட்டிச் சேவகம்புரியும் ஏவலாளர் பலர் இருந்தனர் ; சமையல் காரர்களும் இருந்தார்கள். கொஞ்ச நாள் ஆனதும், ஏவலா ளரின் தொகையைக் குறைத்துக் கொண்டோம் ; இன்னும் கொஞ்ச நாள் ஆனதும், ஒரே ஏவலாளனுடன் திருப்தி யானோம். எங்களிலே பலர் அன்று வரையில் ஒரு குடம் ஜலம் கிணற்றிலிருந்து இழுத்ததே கிடையாது ; உடை யைக் கசக்கிக் கொண்டதும் கிடையாது. சுருங்கச் சொன் னால், ஒரு துரும்பையும் எங்கள் கையால் எடுத்து அப்பால் போட்டது இல்லை.

"ஆயினும் மகாத்மாவுடன் பழகியவுடனே, பிறர் உதவி யின்றிக் கிணற்றிலிருந்து ஜலம் இழுத்தோம்; வேஷ்டி துவைத்துக் கொண்டோம்; பாத்திரங்களையும் துலக்கலா னோம் ; எங்களுக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் நாங் களே செய்துகொள்ள முற்பட்டோம். நாங்கள் இருக்கும் அறையை நாங்களே பெருக்கிச் சுத்தம் செய்து கொள்ளு தல், சமையல் பாத்திரங்களை விளக்கிக்கொள்ளுதல், கடைக் குச் சென்று சாமான் வாங்கி வருதல், ரயிலுக்கு எங்கள் மூட்டை முடிச்சுக்களை நாங்களே தூக்கிச் செல்லுதல் ஆகிய எந்த வேலையும் செய்ய நாங்கள் தயங்கவில்லை.

"சமையல்காரனைப் போகச் சொன்னவுடனே, காந்தி யின் பத்தினியே எல்லோருக்கும் சமையல் செய்து, அன்னை போல் அன்புடன் எங்களுக்கு அன்னமிட்டு ஆதரித்தனள். மகாத்மா காந்தியைக் காண்பதற்கு முன்போ, ரயிலிலே மூன்றாவது வகுப்பில் பிரயாணஞ் செய்வதென்றால், மிகவும்

இளப்பம், கௌரவக் குறைவு என்றே நாங்கள் எண்ணி யிருந்தோம். பின்போ அது மாறிவிட்டது. அவரது எளிய வாழ்க்கை, சுதேசிய உடை, பரமத் தியாகம் ஆகிய எல்லாம் எங்கள் மனத்தைக் கவர்ந்தன. நாங்களும் அவரைப் பின் பற்றலானோம்.''

---

9. காங்கிரஸ் ஊழியம்

சின்ன வயது முதல் சமூக சேவையில் ராஜேந்திரர் சிந்தை கொண்டவர். மாணவர் சங்கம் கண்டும், மாணவருக்கு உதவிபுரிந்தும், பரோபகாரம் செய்தார். சுதேசிய இயக்கம் தோன்றியதும், அதில் கவனம் செலுத்தினார். 1906-ஆம் ஆண்டிலே கல்கத்தா நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜி அக்கிராஸனம்வகித்தார். அப்போதுதான், காங்கிரஸ் மகாசபையின் லக்ஷியம் சுயராஜ்ய சித்தியே என்று முதன் முதல் தீர்மானமாயிற்று. அத்துடன் தேசியக் கல்வியே தேவை, நாட்டுத் துணியும் சாமானுமே நலன் தரும், பரதேச சாமான்களை பகிஷ்காரம் செய்யவேண்டும், என்றும் தீர்மானங்கள் ஏற்பட்டன.

பாபு ராஜேந்திரர் அம்மகா சபைக்குச் சென்றிருந்தார்; அக்கிராஸனரின் பிரசங்கத்தையும், இதர தலைவர்களின் சொல் பெருக்கையும் கருத்தில் கொண்டார்; அது முதல் காங்கிரஸ் அங்கத்தினராக விளங்கலானார். காங்கிரஸ் கூட்டமென்றால் அவர் போகாமலிரார்; இதர மாணவர்களையும் கூட்டிச் செல்லுவார்; தேசப் பெரியார் சொல்லும் வண்ணம் நடத்தல் வேண்டும் என்று வற்புறுத்துவார்; மாணவர் சங்கங்களில் காங்கிரஸ் தீர்மானங்களை எடுத்துக் கூறி விளக்குவார்; அறிமுகமான யாரைக் கண்டபோதிலும், தேச மகா சபையின் சொற்படி நடத்தல்வேண்டும் என்று நினைப்பூட்டு

வார். சொல்லில் மட்டுமன்று செயலளவிலும் அவர் இன்ற ளவும் இம்மியும் தவறியது கிடையாது.

சுவாமி விவேகானந்தரின் பிரசங்கத்தில் ஈடுபட்டு, அமெரிக்காவை விட்டு இங்கு வந்து, ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தில் சேர்ந்து, சநாதன ஹிந்து மதத்தின் உயர்ந்த தத்துவங்களை உணர்ந்து, சொல்லாலும் எழுத்தாலும், செயலாலும் சிறந்து விளங்கிய சகோதரி நிவேதிதா தேவி யென்பாள் ஒரு சமயம் பாபு ராஜேந்திரரைக் காண நேர்ந்தது. பாபுவின் முக விலாசமும், சொல்லழகும் அந்த அம்மையின் நெஞ்சைக் கவர்ந்தன. உடனே, "இந்த இளைஞன் பின்னளிலே பாரத பூமியின் தலைவனாக விளங்குவான், உள்ளத் துறவுகொண்ட உத்தமனாகவும் துலங்குவான்" என்று புகழ்ந்து பேசலானாள்.

தேவியின் வாக்கு ஒரு புறம், 'ஹிந்துஸ்தான் ரிவ்யூ' எனும் சஞ்சிகையின் சோதிடம் ஒரு புறம் இருக்க, அவற்றின் அடையாளங்கள் முன்னதாகவே ராஜேந்திரரின் முகத்தில் பொலிந்தன. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பது பழமொழியல்லவா?

தேச மக்கள் அனைவரும் ஒரு முகமாக எதிர்த்து நின்றும், நள்ளிரவிலே ரௌலட் சட்டம் பிறந்தது பிரசித்தம். அந்த அநீதமான சட்டத்தை எதிர்க்க வேண்டுமென்று இங்கே முதல் முதலாக மகாத்மா காந்தி சத்யாக்ரக இயக்கம் தோற்றுவித்தார். அப்போது அக்கிரமமான சட்டங்களை எதிர்த்து நடக்க இஷ்டமுள்ளவர்கள் அனைவரும் சபதம் கொள்ள வேண்டுமென்று சொன்னார் மகாத்மா காந்தி. அங்ஙனமே ராஜேந்திரர் சபதம் பூண்டார்; பீகார் மாகாணமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, சத்தியாக்ரக இயக்கத்தை வலுக்கச் செய்தார். அதனால் அம்மாகாண வாசிகளில் பலர் அப்புதிய இயக்கத்தில் சேரலாயினர்.

சிறிது காலஞ் சென்றதும், தேசத்திலே கொந்தளிப்பு ஏற்பட்டு விட்டது. பஞ்சாப் மாகாணத்திலே அதிகாரிகள் ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார்கள். ஜாலியன் வாலாபாக் என்னும் தோட்டத்தில் ஜனரல் டயர் என்பார் துப்பாக்கி விளையாட்டு விளையாடினுர். அதனுல் படுகொலை நிகழ்ந்தது. இதற்கு இடையில் ஐரோப்பிய மகா யுத்தத்தின் பலனுக, துருக்கிராஜ்யம் துண்டாடப்பட்டது. 'கிலாபத்'துக்கு ஆபத்து ஏற்பட்டது. இந்தக் காரணங்களால், இந்துக்களும் முகம்மதியர்களும் ஒருமனங் கொண்டு, சத்தியாக்ரக இயக்கத்திலும் சுயராஜ்யக் கிளர்ச்சியிலும் முனைந்து நின்றுர்கள்.

பாடலீபுத்திரநகரிலே, 1920-ஆம் ஆண்டில் கிலாபத் மகாநாடு ஒன்று நடந்தது. 'பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி' என்பர். பார்ப்பதற்குப் பசுவேபோல் தோன்றும் பாபு ராஜேந்திரர், அம் மகாநாட்டில் தலைமை வகித்து, மக்களின் உள்ளத்தை உருக்கி, உற்சாகம் ஊட்டும்படி அழுத்தம் திருத்தமான அரிய பிரசங்க மொன்று செய்தார். பலரும் பரவசமாகி, இயக்கத்தை வலுக்கச் செய்தனர்.

அப்போது, பட்டங்களைத் துறந்தும், பதவிகளை விடுத்தும், கோர்ட்டுகளை பகிஷ்கரித்தும், சட்டங்களை எதிர்த்தும், சட்ட சபைகளை எட்டிப் பாராமலும் ஒத்துழையா இயக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்று மகாத்மா காந்தி யோசனை சொன்னுர். ஆயினும், காங்கிரஸ் மகாசபை அதனை ஒப்புக்கொண்ட பின்பே, தேசமக்களைத் தூண்டவேண்டும் என்பது அவர் கருத்து. 1920-ஆம் ஆண்டிலே, அவ் விஷயத்தை முடிவுசெய்ய, டிசம்பர் மாதம் நாகபுரியில் காங்கிரஸ் மகாசபை கூடுவதா யிருந்தது. அச் சபை அங்கீகரிக்குமானுல், உடனே ஒத்துழையா இயக்கத்தில் முனைவதாக ராஜேந்திரர் அம் மகாநாட்டில் வாக்களித்தார்.

நாகபுரி காங்கிரஸ் மகாசபையில்தான், ஒத்துழையா இயக்கத் தீர்மானம் உலகறியக் கிளம்பியது. முன்பு வாக் களித்த வண்ணமே ராஜேந்திரர் அந்த இயக்கத்தில் இறங்கி ஞர்; வக்கீல் தொழிலைக் கைவிட்டார்; அவருக்கு மாதா மாதம் வக்கீல் தொழிலில் நாலாயிரம் ஐயாயிரம் வருமா னம் கிடைத்துவந்தது. கிடைத்துவந்த காலத்தில், ஊர் நடுவே பழுத்த பழமரம்போல் பலருக்கும் உதவிபுரிந்து வந் தார்; ஏழை மாணவர்களுக்கு அள்ளிக் கொடுத்தார்; இவ் விதம் அவரது வருமானத்தில் பெரும் பாகம் பரோபகாரத் தில் செலவாகிப் போயிற்று.

ஆதலின், வக்கீல் தொழிலைக் கைவிட்ட காலத்திலே அவர் கையிருப்பில் இருந்த தொகை ரூபாய் இருபத் தைந்தே. வக்கீல் தொழிலை விட்டதுமட்டும் அன்று. பாட்ணு சர்வகலாசாலையின் நிர்வாக சபையில் வகித்துவந்த பதவிகளையும் உதறித் தள்ளினர். அதுமுதல், நாளெல்லாம் தேச வேலையே செய்து, தொண்டும் ஆற்றி, காங்கிரஸ் மகாசபையின் உயர் தலைவர்களில் ஒருவராகி, இன்னும் அவ் விதமே ஈடில்லாத் தலைவராக விளங்கிவருகிருர்.

இரண்டு மூன்று வருடமானதும் ஒத்துழையா இயக்கம் நின்றது. தேசமும் ஓய்வுகொண்டது. அதுகண்டு, (காலஞ் சென்ற) சித்தரஞ்சன தாஸர், பண்டித மோதிலால் நேரு இருவரும், தேசத்தை மறுபடியும் தட்டி யெழுப்ப எண்ணி ஞர்கள். ஒத்துழையா இயக்கங் காரணமாக, சட்டசபை பகிஷ் காரம் அமுலில் இருந்தது. அதனுல் தேசமெங்கும் சட்ட சபைகளில் சுயநலமிகளே இலகுவில் நுழைந்துவிட்டனர். எனவே பலவிதத்தில் தேசத்திற்குப் பெருங்கேடுகள் நேர்ந்தன. நேரவே, சட்ட சபை பகிஷ்காரத்தை மாற்றி, அச்சபைகளில் புகுந்து, அரசாங்கத்துடன் நேருக்கு நேராக நின்று, சுதந்திரப் போரை நடத்தும் நோக்கத்துடன்,

சுயராஜ்யக் கக்ஷி என்னும் புதிய கட்சியை அப்பண்டித நேருவும் சித்தரஞ்சன தாஸும் ஏற்படுத்தலாயினர்.

பாபு ராஜேந்திரருக்கோ அக் கட்சியில் சிறிதும் பிடித்தம் கிடையாது. சட்டசபை பகிஷ்காரத்தை மாற்றவே கூடாது என்பது அவர் கருத்து. ஆதலால், புதிய கட்சியின் உதயத்தை எதிர்த்தும், ஒத்துழையா இயக்கத்தை உயர்த்தியும், அரிய கட்டுரைகள் எழுதினர். சுயராஜ்ய சித்திக்கு ஒத்துழையா இயக்கமே ஒப்பற்ற சாதனம் என்பது இன்றும் அவர் கருத்தாகும். ஆயினும், காங்கிரஸ் மகாசபையின் ஆணைக்கு அடங்கியே, அவர் சட்ட சபைப் பிரவேசத்தை இன்று ஆதரித்து நிற்கிறார்.

---

10. மேனாடுகளில் சஞ்சாரம்

வக்கீல் தொழிலே பாபு ராஜேந்திரர் கை விடுகையில் பெரிய வழக்கொன்று முடிவாகாமல் அரை குறையாக இருந்தது. ஆதிமுதல் அதனை நடத்தி, அதன் நுணுக்கங்களையெல்லாம் நன்கு அறிந்த அவர், அரை குறையாக அவ்வழக்கை விட்டுவிட விரும்பவில்லை. விட்டுவிட்டால், வழக்காளி பெரிதும் கஷ்டநஷ்டம் அடைவான். ஆதலின், அந்த ஒரு வழக்கினுக்குமட்டும் கோர்ட்டில் ஆஜராகும் உரிமை கொண்டிருந்தார்.

அந்த வழக்கு 1928-ஆம் ஆண்டிலே, இங்கிலாந்தில் பிரிவி கௌன்ஸிலின் முன்பு விசாரணைக்கு வந்தது. அதற்காக அவர் இங்கிலாந்துக்குச் சென்றார். சென்று, அந்த வழக்கினுக்கு வேண்டிய உதவியெல்லாம் புரிந்தார். பின்பு இங்கிலாந்திலே பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார்; ஆங்காங்கு நம் தேசவிஷயமாகப் பல பிரசங்கங்கள் செய்தார்:

சந்தித்த ராஜதந்திரிகளிடம் இந்தியாவின் கட்சியை விளக்கி, தப்பு அபிப்பிராயங்களைப் போக்கினர். பின்பு ஐரோப்பாவி லுள்ள இதர பல தேசங்களுக்கும் செல்லலானர்.

அவ்விதம் சென்றகாலையில், ஐரோப்பாவிலே மகா ஞானியாக விளங்கும் ரோமேன் ரோலண்டு எனும் பெரி யாரைக் கண்டுபேசும் பாக்கியம் கிடைத்தது. அங்கே சர்வ தேச இளைஞர்களின் மகாநாடு ஒன்று நடந்தது. அதன் அழைப்பிற்கிணங்கி அதில் பிரசன்னமாயிருந்தார். பின்பு ஆஸ்ட்ரியா தேசத்திலுள்ள வியன்ன எனும் நகரில், 'உல கில் யுத்தமே கூடாது' எனும் கொள்கையை வற்புறுத்தும் சர்வதேச மகாநாடொன்று நடைபெற்றது. அதில் அன்பின் பெருமையையும், அஹிம்சையின் தத்துவத்தையும் எடுத் துரைத்து, மனிதராவோர் மிருகப் பிராயமாக ஒருவரை யொருவர் வெட்டிக்குவித்து, இரத்த ஆறு பெருக்கிப் போர் புரிதல் கூடாதென்று பிரமாதமாகப் பேசினர்.

இரத்த ஆற்றில் குளிக்கவேண்டுமென்று விரும்பும் கோலாகல ஆவேசம் படைத்த சிலர், அப்பெரும் பிரசங்கங் கண்டு பொறுக்கவில்லை. 'கழுதை அறியுமா கற்பூர வாசனை' யென்பது ஔவையின் வாக்கு. ஆவேசக்காரர் வெகுண் டெழுந்து, பலமாக அடித்து, நமது ராஜேந்திரருக்குப் பெருந்துன்பம் விளைத்தனர். அப்போது அவர் படுகாய மடைந்தார். நெடுநாள் வைத்தியரிடம் சிகிச்சை செய்து கொள்ள நேர்ந்தது. வெளியே புறப்படவும் முடியவில்லை. ஐந்தாறு வாரம் ஆனபின்பே அவர் குணமடைந்தார். அடைந்ததும் அஹிம்சையின் கொள்கையை அங்கெல்லாம் பரப்பப் பின்வாங்கவில்லை.

இங்கிலாந்திலும் சரி, ஐரோப்பாவிலும் சரி, அவர் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில், ஐரோப்பிய நாகரிகத் தில் ஈடுபடவில்லை. நம் தேச நடை உடை பாவனைகளையும்

கைவிடவில்லை. எங்கும் கதராடையும் கதர் குல்லாவுமே தரித்துச் சென்றார். அதுகண்ட பலரும் 'ஈதென்ன உடை!' என்று கேட்டனர். சிலர் பரிகாசமும் செய்தனர். அப்போது அனைவருக்கும் கதரின் உற்பத்தி, மகிமை, நோக்கம் அனைத்தையும் நன்கு கூறி விளக்கினார் நமது ராஜேந்திரர்.

கதரின் மகத்துவத்தைக் குறித்து அநேகர் எழுதியிருக்கிறார்கள். பாபு ராஜேந்திரர் எழுதியுள்ள நூல், மகாத்மாவையும் பரவசமடையச் செய்ததாம். காந்தீயத்தைக் குறித்தும் அவர் எழுதியுள்ள நூலை உச்சிமீது கொண்டு கொண்டாடாதார் இடையாது. மேனாட்டுப் பிரயாணத்தின் நடுவே எகிப்து தேசத்தையும் அவர் பார்வையிட்டு மகிழ்ந்தார்.

---

11. சிறைவாசம்

பாபு ராஜேந்திரப் பிரஸாதர் **1920** - ஆம் ஆண்டிலே ஒத்துழையா இயக்கத்தில் சேர்ந்தார். அப்போது அவரை அரசாங்கம் கைதி செய்யவில்லை. 1930-ம் ஆண்டில், மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்ரகம் துவக்கினார் அல்லவா? முந்திய இயக்கத்தில் மும்முறமாக வேலை செய்தது போலவே, இந்த இயக்கத்திலும் ராஜேந்திரர் வேலை செய்தார். 1930-ஆம் ஆண்டு ஜுலை மாதம் அவர் கைதி செய்யப்பட்டார். அப்போது அவருக்கு ஆறுமாதம் சிறைவாசம் கிட்டியது. அந்த சமயம் அலகபாத் 'லீடர்' பத்திரிகை பின் வருமாறு எழுதியது:—

"பீகார் மாகாண மக்களுக்கு பாபு ராஜேந்திரப் பிரஸாதர் தெய்வம் போன்றவர். தேச ஜனங்களுக்கோ அவரிடம் மிகுந்த மதிப்பு உண்டு. காரணம், அவரது பெருந்தன்மையும், சுயநல மின்மையுமேயாம். இத்தகைய பெரிய

மனிதரைச் சிறைக்கு அனுப்புவதால், கஷ்ட நஷ்டம் அடைவோர் அரசாங்கத்தாரே யாவர். அவரைச் சிறைக்கு அனுப்பியதால் அரசாங்கத்துக்கு என்ன லாபம்? அதனிடம் ஜனங்களுக்கு அன்பு அதிகரித்துளதோ? இல்லவே இல்லை.

"மகாத்மா காந்தியின் மகா விசுவாசமான சிஷ்யர்களில் ராஜேந்திரரும் ஒருவர். சிந்தை, சொல், செயல் மூன்றிலும், ஏறக்குறைய மகாத்மா காந்தியைப்போல் அஹிம்சையை மேற்கொண்டவர் ராஜேந்திரரே. அஹிம்சையினின்று இம்மியும் தவருவண்ணம் பீகாரில் பிறரை நிலைக்கச்செய்த பெருமையும் அவருக்கே உண்டு. பொறுமை சிதறும்படியான சமயம் நேர்ந்தபோதெல்லாம், அஹிம்சையே கொண்டு, அன்பு பூண்டு தொண்டுபுரியும் வண்ணம் இதர காங்கிரஸ் ஊழியருக்கு வழிகாட்டி வந்த வள்ளலும் அவரே. அவரைச் சிறைசெய்து என்ன பயன்? அவரே பீகாரின் பிரதம தர்ம வீரர்."

பின்னர் 1932-ஆம் ஆண்டிலும் அவர் ஆறுமாதம் சிறைபுக நேர்ந்தது. குழந்தை முதலே அவர் சோனியாக இருப்பார். உடலுடன் உள்ளூர இருந்த காசநோய் சிறைவாசத்திலே சீறித் தலை தூக்கியது. அவர் பெரிதும் வருந்தினர், அதிகாரிகளும் அச்சங்கொண்டனர்; சிகிச்சை எல்லாம் செய்தும் உதவினர்.

மூன்ருவது முறையாக அவர் சிறை புகலானர். இப்போது தண்டனைக் காலம் மிகவும் அதிகம். பதினைந்து மாதம் சிறையில் கிடந்தார். காசநோய் அவரைப் பெரிதும் வாட்டியது. மூன்றுமுறை தேசநிமித்தம் சிறைபுகும் பாக்கியம் பெற்றவர் ராஜேந்திரர். உண்மைத் தேசாபிமானிக்கு இருப்பிடம் சிறைக்கூடமே என்பது மேதாவிகளின் வாக்கு. அவரைப் பின்பற்றி, பீகார் மாகாண மக்களில் பலர் சிறை புகுந்தனர்! அவ்விதம் தேசத்தொண்டும் செய்தனர்.

அவசரச் சட்டங் காரணமாக அவர் மட்டும் சிறை புகுந்தார் என்பது இல்லை. அவர் ஹிந்தி பாஷையிலே 'தேசம்' என்று ஒரு பத்திரிகை நடத்திவந்தார். ஒத்துழையா இயக்கத்தின் உயர்வையும், அஹிம்சையின் அரிய தத்துவங்களையும் இது உரைத்து வந்தது. வாசகர்களில் பலர் அப்பத்திரிகையின் மூலம் அஹிம்சா போதம் கொண்டனர். அத்தகைய பத்திரிகையின்மீது அவசர அச்சுச் சட்டம் சீறிப் பாய்ந்தது. அதனால் அப்பத்திரிகை பிரசுரமாகாமல் நின்றுபோக லாயிற்று.

தேச பாஷையிலே அவருக்குப் பற்று மிக அதிகம். பல பத்திரிகைகளுக்கு அவர் விஷயதானம் செய்துவந்தார். பல சிறு நூல்களும் எழுதியுள்ளார். சம்பரான் சத்தியாக்ரகம், காதி மகத்துவம், காந்தி தத்துவம் முதலிய பெரு நூல்கள் பொன்னேபோல் போற்றத்தக்கன. நூல்களின் நடையிலே ஓர் அழகும் வேகமும் இருக்கும்; சொல்லிலே பொருளும் போதமும் பொலியும்.

வக்கீலாக இருந்த காலத்திலே 'லா வீக்லி' என்னும் சட்ட சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்தார். பீகாரிலே ஆங்கிலத்தில் பிரசுரமாகும் பிரபல தேசீய பத்திரிகை, 'ஸர்ச்லைட்' என்பதாம். அதன் நிருவாகிகளில் நமது கதாநாயகரும் ஒருவர்.

12. பூகம்ப நிவாரணம்

இந்த இருபதாம் நூற்றுண்டிலே இயற்கையை வென்றுவிட்டதாக மனிதரில் சிலர் மமதை கொள்வர்; வீறும் பேசுவர் ; விதவிதமான நவீன யந்திரசாதனங்களே மனிதரின் மமதைக்குக் காரண மாகும். இருந்த இடத்திலிருந்தே எதையும் மனிதன் சாதிக்கிருன் என்பது மெய்யே. ஆயினும் மனித சக்தியை மீறிய சக்தி - தெய்வ சக்தி - ஒன்று உண்டு. அத் தெய்வ சக்தியை இன்றளவும் மனிதன் வென்ருனில்லே. அத் தெய்வ சக்தியையே சிலர் இயற்கை (Nature) என்பர்.

இயற்கைத் தேவிக்கு, யாது காரணமோ அறியோம், கோபம் பொங்கியது. 1934-ஆம் வருஷம் ஜனவரி மாதம் பதினைந்தாந்தேதி பீகாரிலே பிரமாதமான பூகம்பம் உண்டாயிற்று. பூமி படீர் என்று வெடித்தது. மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் இருந்த இடம் தெரியாது மறைந்தன. சில இடங்களில் வீடுகள் நொறுங்கி விழுந்தன. சில இடங்களில் வெள்ளம் புரண்டது. சில இடங்களில் ஒரே மணல் காடு உண்டாயது. ஆடுமாடுகளும் மனிதர்களும் கணப்பொழுதில் மாண்டு மடிந்துபோக, ஏராளமான உயிர்ச் சேதம் நேர்ந்தது. பொருள்சேதமோ பிரமாதம்.

தெய்வம் சீறியதோ, பஞ்சபூதங்கள் புரண்டனவோ, யார் செய்த பாவமோ, விதியின் விளேவோ, பாவத்தின் செயலோ, என்று பலரும் பிரமித்தனர், புழுங்கினர், புலம்பினர். முன்னம் செய்த வினையின்பயனே என்ருர் மகாத்மா காந்தி. இல்லே, இயற்கையின் விளேவு என்ருர் கவிச்சிரேஷ்டர் தாகூர். அத்தகைய சமயத்தில் பாபு ராஜேந்திரர் சிறையில் கிடந்தார். விடுதலேயாக ஒருமாதம் இருந்தது. தந்தை

யும் தாயும் போன்ற புண்ணியன் இதுசமயம் அருகில் இல்லையே என்று பீகார் வாசிகள் பெரிதும் வருந்தினார்கள். அப்போது பாபுராஜேந்திரர் சிறையிலே காசநோயால் வருந்திக் கிடந்தார். அதிகாரிகளுக்கும் கவலை அதிகரித்தது. எல்லாம் கூடிக் கொள்ளவே, சிறை வாசத்திலே ஒருமாதம் பாக்கி யிருக்கையில், அரசாங்கத்தார் அவரை விடுதலை செய்தனர். குற்றுயிராக அவர் வெளியே வந்தார்.

விடுதலையான மூன்றாவது தினத்திலேயே பூகம்பகஷ்ட நிவாரண வேலையில் அவர் முனைந்தார். வீடு வாசல்களையும், உற்றார் பெற்றாரையும் இழந்து பலர் தவிப்பதைக் கண்டதும், தமது உயிருக்கு உலையாக இருக்கும் கொடு நோயை ராஜேந்திரர் ஒரு பொருட்டாக எண்ண வில்லை. மக்களின் கண்ணீரைத் துடைக்கவும், ஆறுதல் அளிக்கவும், அல்லும் பகலுமாக அறுபது நாழிகையும் பலருடன்சேர்ந்து அவர் பாடுபட்டார்.

பிரமாதமான விபத்தைப் போக்கி, ஓரளவேனும் உதவிபுரிய, மிகவும் பெரிய தொகை வேண்டும் அல்லவா? நாவசைந்தால் நாடு அசையும் என்பார். மக்களின் கஷ்ட நஷ்டத்தை அவர் விரித்துரைத்து, வேண்டுகோள் ஒன்று விடுத்ததுதான் தாமதம். தேசத்தின் நானு பாகங்களிலிருந்தும், கடல்கடந்து வசிக்கும் மக்களிடமிருந்தும், பணம் வந்து குவியலாயிற்று. தரும சொத்தான அப்பணத்தை யாரும் குறைகூற முடியாத வழியில் அவர் பாத்திர மறிந்து வழங்கி வந்தார். அச்சமயத்தில் மகாத்மா காந்தி எழுதியது என்னவென்றால்:—

“ எனது சகாக்களான ஊழியரில் சிறந்த ஒருவர் ராஜேந்திரப் பிரஸாதர். வேண்டும்சமயத்தில் என்னை அழைத்து, அவர் ஏவல் கொள்ளலாம். ஹரிஜன ஊழியம் எனக்கு எப்படி முக்கியமோ அப்படியே அவருக்கும். பீகார்விஷயம் அவருக்கு

எவ்வளவு முக்கியமோ அப்படியே எனக்கும். என்னை ஹரிஜன வேலைக்காக ஆண்டவன் தேர்ந்தெடுத்திருப்பதைப்போல் பீகார் பூகம்ப கஷ்ட நிவாரண வேலைக்கு அவரை ஆண்டவன் விதித்திருக்கிறான்."

பீகார் கஷ்ட நிவாரண வேலைக்கு ராஜப் பிரதிநிதியும் ஒரு நிதி திரட்டினார். கவர்னர் ஜெனரலின் நிதி என்றால் யார்தான் பணங்கொடார்? அரசாங்கத்திற்கு உள்ள செல்வாக்கோ அபரிமிதமானது. அரசாங்கத்தின் செல்வாக்குடன் ஒப்பிடுகையில், ராஜேந்திரரின் செல்வாக்கு எம்மாத்திரம் என்று சிலர் பேசுவர். ராஜேந்திரரின் வேண்டுகோளை மதித்து, வந்து குவிந்த பணம் எவ்வளவு? ராஜப் பிரதிநிதி திரட்டிய நிதியில் சேர்ந்த தொகை எவ்வளவு? ஈடில்லாச் செல்வாக்கும் மதிப்பும் அதிகாரமும் படைத்த அரசாங்க நிதிக்கு எவ்வளவு பணம் சேர்ந்ததோ, அதில் பாதி அளவு ராஜேந்திரரின் நிதிக்குக் கிடைத்தது. இதைக்குறித்து (கல்கத்தாவில் பிரசுரமாகும்) ஆங்கிலப் பத்திரிகையான 'ஸ்டேட்ஸ்மென்' எழுதியது இது:—

"ஜன நிதிக்குப் பணம் சேர்க்கும் பிரதான புருஷர் பாபு ராஜேந்திரப் பிரஸாதர். அவருடைய வேண்டுகோளை மதித்து மிகுந்த பணம் சேர்ந்துளது. இதைப் பார்த்தால் இந்தக் காங்கிரஸ் ஊழியரிடம் இந்திய மகா ஜனங்களுக்குப் பரிபூரணமான நம்பிக்கை உண்டென்பது புலப்படும். பூகம்பம் நேர்ந்த உடனே, அவர் சிறையிலிருந்து விடுதலை அடைந்தார். அடைந்ததும், துர்ப்பாக்கியமான மாகாணத்தின் நிலையைக் கண்டு, உதவிபுரிய முன் வந்தார். விபத்தின் தன்மையை முதல்முதல் நன்குணர்ந்து நலம்புரிய முற்பட்ட பெருமை பாபு ராஜேந்திரரையே சாரும்."

பூகம்பத்தின் கஷ்ட நஷ்டங்களைப் போக்குவதில் அவரைப்போல் உழைத்தவர்கள் இல்லை. அம் மாகாண

மக்களின் மனக் கோயிலில் அவர் தமது சேவையினால் குடி கொண்டு விளங்குகின்றார். அவருடைய ஊழியத்தை மதித்து, கல்கத்தா நகர பரிபாலன சபையின் மேயராக அன்று விளங்கிய பாபு ஸந்தோஷ குமார கோஷ் என்பார் கூறியது இதுவாம்:—

"பீகார் பூகம்பப் பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டேன். உள்ள நிலைமையை என் கண்கொண்டு கண்டேன். அப்போது ஒரே ஒரு புருஷர்தான் என் மனக் கண் முன்னே நின்றார். அவர்தாம் ராஜேந்திரப் பிரஸாதர்; நம் தேசத்தின் ஆஸ்தி போன்றவர்; தேசீய ஐவேஜியும் ஆவார். அவருக்கு உடல் நலமே கிடையாது. என்றாலும் மக்களின் கஷ்டத்தைத் தணிக்க இரவு பகலாகப் பாடு படுகிறார். இந்தக் கஷ்ட நிவாரண வேலைக்கு இச்சமயம் அவரைவிடச் சிறந்த புருஷர் ஒருவர் உண்டோ?"

கஷ்ட நிவாரணத்துக்காக ஒன்பது மாதத்தில் அவர் சுமார் முப்பது லக்ஷம் ரூபாய் சேர்த்தார். இந்த ஒரு காரணத்தைக் கொண்டே அவரை இந்தியரில் முன்வைத்து எண்ணுதல் வேண்டும். 'சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்' என்பர். அவ்விதமே, இவன் வேற்று மனிதன், இவன் அயலான், இவன் நம் கக்ஷியைச் சார்ந்தவனல்லன், இவனால் என்ன ஆகும், என்று ராஜேந்திரர் எண்ணாமல், யார் யாரிடமிருந்து என்ன என்ன உதவிபெற முடியுமோ, அவ்வளவையும் பெற்று அரிய தொண்டு புரிந்தார். பலதிறப்பட்ட மனப்பான்மை யுள்ளவர்களும், பலவாரான ராஜீயக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவருடன் ஒத்து உழைத்தார்கள். அவரது பெருமைக்கு இதுவும் ஓர் அத்தாக்ஷியாகும்.

---

13. ஊழியத்தின் பலன்

ஆனந்தம், பரமானந்தம், பிரமானந்தம் என்பர். அந்த ஆனந்தத்தை அடைவது எப்படி? மன அமைதி இல்லை, நிம்மதி பிறக்கவில்லை, என்ன செய்வது, என்பர் சிலர். மனவமைதியை அடைவது எங்ஙனம்? உண்மையில் ஊருக்கு உழைத்தால், ஆனந்தம் எய்தலாம், மன அமைதியும் பெறலாம். உள்ளங் கலந்த உண்மை ஊழியத்தினும் உயர்வுடைய ஆனந்தம் ஒன்றுண்டோ?

உண்மையான உழைப்பில் ஆசை பறக்கும்; சுயநலம் தலைகாட்டாது; சித்தசுத்தி பிறக்கும்; சிறப்பெல்லாம் வந்து, காலடியில் குவிந்து கிடக்கும். உலகோரின் உள்ளக் கோயிலிலே குடி கொள்ளலாம். ஆனதுபற்றியே, மகாத்மா காந்தியை உலகம் போற்றுகின்றது. அவரே ஒரு சமயம், "எனது சகாக்களான ஊழியரில் சிறந்த ஒருவர் பாபுராஜேந்திரர்" என்று சொல்லியிருக்கிறார். நகம் முளைத்த நாள் முதல் ஊழியத்தில் சிந்தை கொள்ளவே, வயது வளரவளர ஊழியமும் தியாகமும் வளர்ந்து வந்தன ராஜேந்திரரிடம்.

ராஜேந்திரரின் உண்மை ஊழியத்தை நம் தேசமும் சரி, காங்கிரஸ் மகா சபையும் சரி, ஆதி முதல் கவனித்து வந்தது. ஊழியம் புரிவோர் - உண்மை ஊழியம் புரிவோர் - ஒரு பலனையும் எதிர்பாரார். ஊழியத்தைக் கொண்டாடுவோரோ செயலளவில் தங்கள் நன்றியறிவைக் காட்ட எண்ணுவர். அவ்விதம் ராஜேந்திரரிடம் நன்றியறிவு காட்ட ஒரு வழிதான் உண்டு. அதுவே தேசத்தலைமை அளிப்பதாம். குடியரசுள்ள நாடுகளிலே குறிப்பிட்ட காலத்திற்கு ஒருவரைத் தலைவராக |மகா ஜனங்களே தேர்ந்தெடுத்தல் பிரசித்தமான வழக்கம்.

தற்சமயம் குடியரசு இல்லாவிடினும், குடியரசு முறையில் நடந்துவரும் காங்கிரஸ் மகா சபையானது ஆண்டு தோறும் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும். 1929-ஆம் ஆண்டில், அவ்விதம் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று யோசனை பிறந்தது. கல்கத்தாவில் பிரசுரமாகும் பிரபல மாத சஞ்சிகையான 'மாடர்ன் ரிவ்யூ' எழுதியதாவது:—

"வருங்காலம் வாலிபருக்கே உரியதாம். தற்காலமோ வாலிபர், வயது ஆனவர் ஆகிய இருவருக்கும் உரியது. வாலிபராவோர் எழுச்சிக்குரிய சக்தியை ஊட்டுவராக. தேசம் எனும் வண்டியை ஓட்டுவோன் தற்சமயம் பழுத்த அனுபவம், அல்லது பரம ஞானம் படைத்தவனாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் அவனது உழைப்பினால் நமக்குப் பலன் கிட்டும்.

"ஜன நாயகம் மிகுந்த காலம் இது. எனவே இக்காலத்தில் எவனொருவன் மிகவும் பிரசித்தமாக விளங்குகின்றானோ அவனையே தேசத் தலைமைக்குத் தேர்ந்தெடுத்தல் இயற்கை. ஆயினும், படாடோபம் இல்லாத அடக்கமான ஊழியர் உளர், அவருக்கு மதிப்புத் தரவேண்டும், அவரைப் போற்ற வேண்டும், தகுந்த பதவியில் அவரை அமர்த்தவேண்டும்; அமர்த்தினால் மிக்க பலன் உண்டு, என்று சுட்டிக் காட்டுதல் பொதுநல வாதிகளின் கடமை.

"அத்தகைய ஒருவர் பீகார் வாசியான பாபு ராஜேந்திரப் பிரஸாதர்; இளைய ராஜீய வாதிகளில் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்லர்; பலரையும் விட - எல்லாரையும் விட என்றும் சொல்லலாம் - அவர் மேலானவர். மதிவன்மையிலும் சரி, ஒழுங்குபடுத்தும் திறமையிலும் சரி, தியாகத்திலும் சரி, காரிய சாதனையிலும் சரி, அவர் சிறந்தவரே!"

இவ்விதம் அப்பத்திரிகை எழுதிய பின், தேசத்திலே சுதந்திரப் போராட்டம் தலையெடுத்து விட்டது. ஆதலின்

காங்கிரஸ் மகா சபை கூடுவதற்கில்லை. அப்பால், சமரஸத் தோற்றங் காரணமாக, 1932-ஆம் ஆண்டிலே பூரி (ஜெகந் நாதம்) நகரில் காங்கிரஸ் மகா சபை கூடுவதா யிருந்தது. அதற்குள் மீண்டும் போராட்டம் மூண்டு விட்டது. அப் போது ராஜேந்திரரும் அடக்குமுறைக்கு ஆளாகிச் சிறை யில் கிடந்தார். சபை கூடுவதற்கும் தடைகள் இருந்தன. ஆதலின் பூரியில் அம்மகா சபை கூட முடியவில்லை.

ராஜீயக் கொந்தளிப்பின் காரணமாக, 1931, 1932, 1933, இந்த ஆண்டுகளிலே சரிவர நம் தேச மகாசபை கூட முடியாது போயிற்று. டில்லியிலும் கல்கத்தாவிலும் விசேஷ காங்கிரஸ் நடைபெற்றது மெய்யே. எனினும், ஆர அமர நடவடிக்கை நடத்த முடிய வில்லை. 1934-ஆம் ஆண்டில் அக்டோபர் மாதத்திலே பம்பாய் நகரில் காங்கிரஸ் மகாசபை மிகுந்த உற்சாகத்துடன் கூடி, தேசத்தின் வருங்கால நிலை யைக் குறித்து, அரிய தீர்மானங்கள் செய்யலாயிற்று.

அம் மகாசபைக்கு ராஜேந்திரப் பிரஸாதரே தலைமை வகிக்கவேண்டுமென்று தேசம் ஒரு முகமாகத் தீர்மானம் செய்தது. வேறு இரண்டொருவரின் பெயர் பிரஸ்தாபத் துக்கு வந்த போதிலும், அன்னாரும் நமது ராஜேந்திரப் பிரஸாதரையே குறிப்பிட்டனர். உண்மை ஊழியத்தின் பலனாக, மகா ஜனங்கள் அளிக்கக்கூடிய பெரும் பதவி அது ஒன்றேயாம். முப்பத்தாறு கோடி மக்களின் ஏக தலைவன், சர்வாதிகாரி என்பதினும் சிறந்த பதவி உளதோ?

பொதுவாகப் பேசினால், அரசருக்கும் அதிகாரிகளுக் கும் நடக்கும் உபசாரம் உள்ளங்கலந்த ஒன்று என உரைக்க முடியுமா? உள்ளங்கலந்த உபசாரம் நடத்தல் அருமை. சக் கரவர்த்திகளுக்கும் நடவாத பிரமாதமான உபசாரம் காங்கி ரஸ் தலைவருக்கு நடக்கும். அவ்விதம் பாபு ராஜேந்திரப் பிர ஸாதருக்கு நடந்தது. செல்லும் இடமெல்லாம் சிறப்புத்தான்!

14. அக்கிராசனப் பிரசங்கம்

பம்பாய் நகரிலே 1934-ஆம் ஆண்டு அக்டோபர் 26-ஆம் தேதி காங்கிரஸ் மகா சபை கூடியது. அதில் அக்கிராசனம் வகித்து, ராஜேந்திரப் பிரஸாதர் நிகழ்த்திய பிரசங்கத்தின் முக்கிய சாரம்:—

"அபிமானம் காரணம்:—விதியின் விளைவாக, பீகாரிலே பூகம்பம் உண்டாயிற்று. பூகம்பத்தை யடுத்துப் பெரு வெள்ளமும் புரண்டது. பரந்த பாரத பூமியிலுள்ள அனைவரும் காசு பணம் கொடுத்து உதவியதோடு, கண்ணீரும் வடித்தனர்; உடல் கொண்டு உழைக்கவும் முன்வந்தனர். அம் மாகாணத்தின்மீது உங்களுக்குள்ள அபிமானம் காரணமாகவே இன்று நான் இப் பெரும் பதவி வகிக்கின்றேன்.

தேசத் தியாகம்:—சென்ற மூன்றரை வருஷ காலத்தில் தேசம் எவ்வளவோ தியாகம் செய்தது; துன்பமும் அடைந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் சிறை புகுந்தனர்; தடியடி பட்டனர். அடிக்கும் உதைக்கும் ஓர் எல்லை இல்லை. துப்பாக்கிப் பிரயோகமும் நடந்தது. கனத்த அபராதம் விழுந்தது. சொத்துக்கள் பறிமுதலாயின. பலர் தமது உடல், பொருள், ஆவி எல்லாம் இழந்தனர்.

விசேஷ காங்கிரஸ்:—ஆயினும் இயக்கம் நசுங்கிப்போய் விடவில்லை; சிறிதும் தளராமல் மாதக் கணக்காக நடந்து கொண்டே வந்தது. இரண்டொரு தினங்களில் நசுக்கி விடலாமென எண்ணிய அதிகாரிகள் திக்பிரமை கொண்டார்கள். தடியடியும், சிறைவாசமும் நான்கு பக்கமும் சூழ்ந்து நின்றும், யாரையும் சேரவிடாமல் கண்குத்திப் பாம்புபோல் போலீசார் காத்து நின்றும், டில்லி, கல்கத்தா இரண்டு இடங்களிலும் விசேஷ காங்கிரஸ் நடைபெற்றது.

அடக்கு முறை:—இந்த அடக்கு முறையை விரித்துரைக்க வேண்டியதில்லை. அவசரச் சட்டங்கள் மிடுக்கான நிரந்தர சட்டங்களாயின. கோர்ட்டுகள் ஒழிய, அதிகாரிகள் வரம்பிலா அதிகாரம் பெற்றார்கள். பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டு இடப்பட்டது. புதிய குற்றங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. பயங்கரச் செயல்களை அடக்குவதாகச் சொல்லி, வங்காளத்திலே மிடுக்கான சட்டங்கள் இயற்றப்பட்டன.

பயங்கர இயக்கம்:-பயங்கர இயக்கத்தை நாம் அடியோடு வெறுக்கிறோம். மீண்டும் சொல்ல வேண்டுமோ? பயங்கர இயக்கத்தினால் தேச முன்னேற்றம் தடைபடுகிறது; மேலும், சீர்கேடுகள் உதிக்கின்றன. இம் மட்டோ? பயங்கர இயக்கம் நமது இயற்கைக்கு நேர்விரோதமானது. என்றாலும் அந்த இயக்கத்தில் முனைந்துள்ள இளைஞரை, யாரும் ஒப்பமுடியாத அடக்கு முறைகளினால் நல்வழிப்படுத்திவிட இயலாது. இதனை அரசாங்கம் கவனித்தல் வேண்டும்.

நமது நிலைமை :—சொந்த தேசத்திலேயே நமக்கு மிகவும் சாமானியமான பிரஜா உரிமைகள் இல்லாதிருக்கையில், அயல்தேசங்களிலே நம்மவரின் நிலையைக் குறித்து நாம் ஆச்சரியப்பட இடமுண்டோ? இங்கே நமது நிலைமை உயர்ந்தால்தான், அயல் தேசத்திலுள்ள நம்மவரின் நிலைமை, தானே உயரமுடியும். அயல் தேசங்களிலுள்ள நம்மவரிடம் ஆண்ட்ரூஸ் காட்டும் அக்கறையே அக்கறை!

மாகாண சுய ஆட்சி :—மாகாண சுய ஆட்சி உண்டென்று பிரமாதமாகப் பேசுகிறார்கள். உண்மையில் மகா ஜனங்களுக்கோ, மந்திரிகளுக்கோ, அதிக அதிகாரம் இல்லை. கவர்னருக்கே உண்மையில் அதிக அதிகாரமும் சுயராஜ்யமும் ஏற்படும். மந்திரிகள் இருந்தபோதிலும், தனது விசேஷமான பொறுப்பு பாதிக்கப்படுகிறதென்று, கவர்னர், தான் நினைத்தபடி காரியம் செய்ய அதிகாரம் உண்டு. ஒரு கை

யால் கொடுத்து ஒரு கையால் பிடுங்கிக் கொள்வதுபோல் இருக்கிறது மாகாண சுய ஆட்சி. சட்டம், ஒழுங்கு இரண்டும் மந்திரிகளின் வசம் இருக்குமாம். ஆயினும் கவர்னர், கவர்னர் ஜெனரல் இவர்களின் விசேஷப் பொறுப்பு என்று சொல்லி, இரட்டைத் தாழ்ப்பாள் போட்டு, இரண்டையும் பூட்டி பத்திரமாக வைத்திருக்கிறார்கள். இது மாகாண சுய ஆட்சியா? நீங்களே பாருங்கள்.

விசேஷப் பொறுப்பு:—விசேஷப் பொறுப்பு என்பது நடைமுதலில் எவ்வாறுளது என்பது நாம் நன்கு அறிவோம். சட்டம், ஒழுங்கு இரண்டும் மந்திரிகளின் வசம் இருக்கும் என்று சொல்லி, கவர்னரின் விசேஷப் பொறுப்பு என்பதை மேலாக வைத்திருப்பதைப் பார்த்தால், மாகாண சுய ஆட்சி என்பது வெறும் மாயை, வெறும் பகட்டு என்றே சொல்லவேண்டும். இது மிகைபடக்கூறுவது அன்று. நமது வீட்டிலே நாம் எஜமானர்கள்தான். எத்தகைய எஜமானத்வம் தெரியுமா? வீட்டு வேலையாளரை ஏவ, நமக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அவர்களுக்கோ நாம் அபாரமான சம்பளம் கொடுக்கவேண்டும்; பென்ஷன் கொடுக்கவும் கட்டுப்பட வேண்டும்; ரஜாவும் பிரமோஷனும் கொடுக்கவும் உறுதி கூறவேண்டும். நல்ல எஜமானத்துவம்!

பிறருக்கே நலம்:—எங்கள் மாகாணத்திலே ஒரு ஜில்லாவில் பருத்தி ஏராளமாக விளைகின்றது. மற்றொரு ஜில்லாவிலே கதர் ஏராளமாக உற்பத்தியாகிறது. விளையும் ஜில்லாவிலிருந்து, நெசவாகும் ஜில்லாவுக்குப் பருத்தியைக் கொண்டுபோக ரயில் சார்ஜ் எவ்வளவு தெரியுமா? பம்பாயிலிருந்து பருத்தியை ஜப்பான் தேசத்திற்கு அனுப்பி, அப்பருத்தியினால் நெசவாகும் துணியை மறுபடியும் பம்பாய்க்குக் கொண்டுவர எவ்வளவு செலவோ அவ்வளவு செலவு! இனி, தென் ஆப்பிரிக்காவிலிருந்து நிலக்கரியை இந்தியப்

பஞ்சாலைகளுக்குக் கொண்டுவர எவ்வளவு செலவாகிறதோ, அவ்வளவு செலவு ஜீகாரில் கிடைக்கும் நிலக்கரியை இந்தியப் பஞ்சாலைகளுக்குக் கொண்டுபோக ஆகிறது!

இன்னும் பல உதாரணங்கள் காட்டலாம். சென்று போன காலத்திலே இந்தியா கவர்ன்மெண்டின் கொள்கையானது இந்தியருக்குச் சாதகமாய் இல்லாமல் அந்நியருக்குச் சாதகமாகவே இருந்திருக்கிறது. எனவே இந்தியருக்கும் அந்நியருக்கும் வேற்றுமையின்றி, நியாயமாக நடக்க ஒரு சமயம் மந்திரி எண்ணினால், மந்திரி வேற்றுமை காட்டுகிறார் என்று, கவர்னரின் விசேஷப் பொறுப்பு என்பது தோன்றி, அந்த அக்கிரமத்தை நிலைநாட்டும்.

எட்டுக்கோடி:—மாகாண சுயஆட்சி ஏற்படுவது காரணமாக, மாகாணங்களிலே ஆண்டுதோறும் சுமார் எட்டுக்கோடி ரூபாய் அதிகச் செலவு பிடிக்கும். இந்தியா கவர்ன்மெண்டிலோ ஆண்டு தோறும் அதிகச் செலவு இரண்டு கோடியாகும். ஏற்கெனவே இந்த ஏழைத் தேசத்தில் அரசாங்கச் செலவு அபரிமிதமாய் இருக்க, சாரமற்ற சீர்திருத்தத்திற்காக இன்னும் அதிகச் செலவை யார் ஒப்பமுடியும்?

போர்முறை:—சுயராஜ்யமடைய 'நீதியும் அமைதியும்' பொருந்திய வழியை மேற்கொள்ளுவதே நமது கோட்பாடு. நீதியும் அமைதியும் பொருந்திய வழி என்றால் என்ன? சத்தியமும் அஹிம்சையும் பொருந்திய வழியேயாம். வேறு வழியை நாம் மேற்கொண்டிருந்தால், நமது போராட்டத்தை உலகம் கூர்ந்து கவனித்திராது. மேலும், வேறு வழியை மேற்கொண்டு நாம் நடந்திருந்தால், இன்னும் எவ்வளவோ மிருகத்தனமான கொடுமைகளுக்கும் தீமைகளுக்கும் நாம் ஆளாகியிருப்போம்.

ஒரு வார்த்தை:—நம்மிடம் தவறுகள் இருக்கலாம். ஆயினும் எவ்வளவோ வேகமாக முன்னேறியிருக்கிறோம்.

சென்ற பதினைந்து ஆண்டுகளில் நாம் சாதித்த காரியங்களை இப்போது பொறுமைக் குறைவினால் நாம் கெடுத்துவிடக் கூடாது. எனது நண்பர்களான அபேத வாதிகளுக்கு வணக்கமுடன் ஒரு வார்த்தை. மகா ஜனங்களுக்கு மிகுந்த ஊக்கம் ஊட்டக்கூடிய கொள்கை ஒன்று வேண்டும். அப்போதுதான் ஒருவரே ஏக போகம் கொள்வதும் நீங்கும் என்று நினைக்கிறார்கள். சத்தியம், அஹிம்சை இரண்டையும்விட உயர்ந்த கொள்கை ஒன்று உண்டோ? ஒருவரே ஏக போகம் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஒழிக்கவேண்டும் என்றும் தேசம் தீர்மானித்திருக்கிறது. பாவத்தைப் போக்க நாம் போராடுகிறோம். அடிபிடி கட்டாயம் செய்தால், நமக்கே இரு மடங்கு தீமை நேரும். பாவிகளைத் திருத்துதல் மெதுவாகத்தான் ஆகும் என்று தோன்றலாம். ஆயினும் அதுவே சிறந்த மார்க்கம். பிற்கால சரித்திரத்தில் சிறப்பெய்தும் சாதனமும் ஆகும்.

சபையின் அமைப்பு:—காங்கிரஸ் மகா சபையின் அமைப்பில் சில திருத்தங்கள் உள. அவைபற்றி இரண்டொரு வார்த்தை. இதுவரையில் காங்கிரஸ் மகாசபைக்கு ஆறாயிரம் பிரதிநிதிகள் வர இடமுண்டு. ஆயிரம் போதும் என்பதே மகாத்மாவின் கருத்து. மகாசபைக்கு உள்ள மதிப்பு பிரதிநிதிகளின் தொகையைச் சார்ந்ததோ? அன்று; சபையின் லக்ஷியத்தையும் அங்கத்தினர்களின் தியாகத்தையுமே சார்ந்ததாகும்.

மன உறுதி தேவை:—தலைக்குமேலே வேலை அதிகம். போனதெல்லாம் போகட்டும். மேலே நன்கு நடப்பதைப் பார்ப்போம். மிகப் பெரிய அல்லது பேரூக்கம் ஊட்டக் கூடிய வேலைத் திட்டம் வேண்டுமென்பது இல்லை. ஏற்றுக் கொள்ளும் வேலை அற்பமாக இருந்தாலும், அதனை நிறைவேற்றும் உறுதியே தேவை. நமது பொறுப்போ ஏராளம்.

நம்மை ஆளுவோர் தங்களிடமுள்ள அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதில்லை என்று முன்னையிலும் மிக்க பிடிவாதமாக இருக்கின்றனர். சுதந்தர இயக்கத்தை அடக்குவதற்கு அரசாங்கம் பிரமாதமாக முயலும். சென்ற நான்கு வருஷ அவசரச்சட்ட ஆட்சியே இதற்குச் சாட்சி.

பரிபூர்ண சுயராஜ்யம்:—பரிபூர்ண சுயராஜ்யமே சுதந்தரப் போரின் முடிவாகும். அஹிம்சை கொண்டு அதனைச் சாதிக்கவேண்டும். பரிபூர்ண சுயராஜ்யமென்ருல், ஒரு தேசத்தாரை மற்றொரு தேசத்தார் மாமன் காணிபோல் ஆளுவது தொலைந்தால் போதும் என்பது மட்டும் அன்று. மக்களிலே ஒரு சாரார் மற்றொரு சாராரைச் சுறண்டுவதும் தொலையவேண்டும். அதுதான் பரிபூர்ண சுயராஜ்யம். தவிர, பரஸ்பர நன்மைக்காக இதர தேசத்தார்களுடனும் நேசமாக இருக்க இடமுண்டு. பரிபூர்ண சுயராஜ்யம் என்று சொல்லும்போது, யாருக்கும் எத்தேசத்தாருக்கும் தீமை நினைத்தல் இல்லை. நம்மைச் சுறண்டி நிற்போருக்கும் தீமை நினைக்க எண்ணம் கிடையாது. அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட பரிபூர்ண சுயராஜ்யத்தில் அனைவரிடமும் நல்ல எண்ணம் கொள்ளுவதே நமது நோக்கமாம். அதனுல்தான் உலகிலே ஒரு பக்கத்தில் நம்மீது அபிமானம் ஏற்பட்டு வருகிறது.

சேனை வேண்டாம்:—இதர தேசங்களை மடக்கவேண்டும் என்று இந்தியாவுக்கு விருப்பம் இல்லை. எனவே நாம் ஏராளமாகச் சேனை கொள்ள அவசியம் கிடையாது. பிறரை மடக்க நமக்கு எண்ணம் இல்லா திருக்கையில், பிறரால் நமக்கு ஆபத்து ஏது ? இந்நிலையில் பரிபூர்ண சுயராஜ்யம் என்பதைக் கேட்டு யாரும் பயப்பட வேண்டியதில்லை.

வெற்றி நிச்சயம்:—அஹிம்சை வழியில் ஜன சமூகம் திரண்டு போர் புரிதலே நமக்கு சக்தியாம். இதில் நாம்

ஒருமுறை இரண்டுமுறை தவறலாம். ஆயினும் ஒருநாள் வெற்றி யடைதல் திண்ணம். பலர் இப்போரிலே தங்கள் ஆவியை இழந்தனர். சொத்தையும் இழந்தனர். இன்னும் பலர் பற்பல விதத்தில் தியாகம் செய்துளர். கஷ்டம் கண்டு தளரவேண்டாம். நேர் பாதையை விட்டு விலகவேண்டாம். நமது கொள்கைப்படி நாம் நடப்போமாக! உறுதியில் தளராமல் இருப்போமாக!! உலகம் நமது போர்முறையைப் பரிவுடன் நோக்கி நிற்கிறது. சத்தியாக்ரகத்தில் தோல்வி என்பதே கிடையாது. சத்தியாக்கிரகம் என்றால் வெற்றி என்றே அர்த்தம்.''

---

15. பாபுவின் குடும்பம்

தியாக சமுத்திரமான பாபு ராஜேந்திரப் பிரஸாதின் குடும்பம் புராதனமான பெருமை வாய்ந்தது. அவர் தந்தையின் தந்தை ஒரு சமஸ்தான திவானாக வேலை பார்த்து விளங்கியவர். எனினும் பரோபகார சிந்தையும், இன்னும் பல காரணங்களும் சேர்ந்து கொள்ளவே, குடும்பத்தின் செல்வ நிலை குறையலாயிற்று. 'பெருங்காயம் இருந்த செப்பேபோல்' பாபு ராஜேந்திரப் பிரஸாதரின் குடும்பம் துலங்கியதேயன்றி வேறன்று.

ஆதலினால்தான் அவர் தந்தை மகாதேவ ஸகாயரும் சரி, தமையனார் மகேந்திரப் பிரஸாதரும் சரி, ராஜேந்திரர் தலையெடுத்து, பெரிய உத்தியோகத்தில் அமர்ந்து, மிகுந்த பணம் திரட்டிக் குடும்பத்தின் நிலையை உயர்த்துவார் என்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

அன்றும் சரி, இன்றும் சரி, ஐ. சி. எஸ்., என்றால் அனைவருக்கும் ஒரு மோகம் உண்டு. அவ்விதமே ராஜேந்திரர்

ஐ. சி. எஸ்., பரீக்ஷை கொடுக்கவேண்டும் என்று தந்தையும் தமையனும் விரும்பினர். ராஜேந்திருக்கோ அப்பரீக்ஷை கொடுப்பதில் மனம் செல்லவில்லை. அது காரணமாகவே அவர் தந்தை மனநோய் கொண்டார். அந்நோயே மகாதேவரின் உயிருக்கு ஓர் உலையாக முடிந்தது.

இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்துழைக்க ராஜேந்திரர் அடங்கா ஆவல் கொண்ட காலையில், மகேந்திரப் பிரஸாதர் குறுக்கே நின்றார். காரணம் குடும்பத்தின் ஏழ்மை நிலையே. ராஜேந்திரரோ செல்வநிலையில் தமது குடும்பத்தை உயர்த்தாது போயினும், தமது தியாகத்தன்மையால் தலை சிறக்கச் செய்துள்ளார். பாரத மக்களின் மனத்தகத்தே அவர் குடும்பம் குன்றின் மேலுள்ள கர்ப்பூர தீபத்தின் ஜோதிபோல் துலங்காநிற்கும்.

குடும்ப நிலை உயர வேண்டுமென எண்ணுநின்ற மகேந்திரப் பிரஸாதரும் பரோபகாரத்தில் பேர் வாங்கியவர். பீகார் மாகாணத்திலே கூட்டுறவு முயற்சியைப் பிரபலம் செய்தவர் மகேந்திரரே. லாவாதேவித் தொழிலுக்கும், வர்த்தகத் தொழிலுக்கும் இவர் புரிந்த ஊழியம் கொஞ்சம் அன்று. பீகாரிலே மதிப்பு வாய்ந்த பொதுஜன உழைப்பாளிகளில் இவரும் ஒருவர்; தம்பி ராஜேந்திரரை உயர் நிலைக்குக் கொண்டுவந்தவரு மாவார். இளமைமுதல் ராஜேந்திரரிடம் பேரன்பும் பெரும் பாசமும் கொண்டிருந்தார். தந்தைக்குப் பின் தமையனே பிதா என்னும் முதுமொழியின் உண்மைக்கு இவரே தக்க உதாரணம்.

ராஜேந்திரருடன் பிறந்தவர் நால்வர். அந் நால்வரில் ஒருவர் மகேந்திரர். மற்ற மூவரும் பெண்மக்கள். அம் மூவரில் ஒருவரே இப்போது உயிருடன் இருக்கிறார். மற்றையோர் இறந்துவிட்டனர். போன வருஷம் மகேந்திரப் பிரஸாதரும் போய்விட்டார் உலகைவிட்டு.

ராஜேந்திரருக்கு மணிபோல் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தவர் பெயர் மிருத்திபுஞ்சயன். மிருத்திபுஞ்சயப் பிரஸாதுக்கு இப்போது வயது முப்பது. இரண்டாவது பிள்ளை தநஞ்சயப் பிரஸாத். இவருக்கு வயது இருபத்தாறு. ராஜேந்திரரின் குடும்பத்தார் சைவ உணவே கொள்ளும் சிறப்பினர்; நன்னெறியும் கொண்டோர். காசு பணத்தில் குடும்பம் ஏழையே அல்லாமல், நல்ல சிந்தையிலோ, நடத்தையிலோ, நேர்மையிலோ ஏழை அன்று. குலத்திலும், பணத்திலும், குணமே பெரியதல்லவா? குணக் குன்றே போன்றது ராஜேந்திரரின் குடும்பம்.

---

16. புகழ்மாலை

ஸ்ரீமான் சச்சிதானந்த சின்ஹா என்பார் பாட்னு நகர வாசி; பெரிய வக்கீல்; பழுத்த மிதவாதி; சட்ட ரீதியான வழியிலேயே, சுயராஜ்யத்திற்குப் பாடுபடவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்; பீகார் மாகாண கவர்ன்மெண்டின் நிருவாக சபையில் பொக்கிஷ மெம்பர் பதவி வகித்தவர்; பாபு ராஜேந்திரரை இளமை முதல் நன்கு அறிந்தவர். அவர் எழுதியிருப்பதின் சாரம் இது:—

"பாபு ராஜேந்திரப் பிரஸாதர் துறவி போன்ற ஒழுக்கம் உடையவர். அவர் முகத்தைப் பார்த்த அளவில், நமக்கு அன்பு உதிக்கும்; ஆர்வம் பிறக்கும். அவர் பெருந்தன்மை வாய்ந்த பெருமான்; பரந்த அறிவும் விரிந்த ஞானமும் ஆழ்ந்த அபிமானமும் வாய்ந்தவர்; அடக்கமும் பொறுமையும் அவரிடம் நிரம்பி நிற்கும். யாரையும் தாழ்ந்தவர் என்று அவர் கனவிலும் கருதார்.

தீவிர தேசீய வாதிகளிலே அவர் தலை சிறந்தவர். சட்ட சம்மதமான வழியில் சுய ராஜ்யப் போர்புரியும் நம்பிக்கை இல்லாதவர்; ஒத்துழையா இயக்கம் போன்ற நேர்முகமான போர் முறையிலேயே பிடிப்புக் கொண்டவர். பாரதத் தாய்க்கு அவர் புரிந்துள்ள ஊழியம் பலரையும் பிரமிக்கச் செய்யும்.

தற்சமயம், தேசம் உள்ள நிலைமையில் ஏதேனும் ஒரு ராஜீயக் கட்சியைச் சேர்ந்தோரில் பலரும் ஒரு விதத்தில் தேச முன்னேற்றத்திற்குத் தடை கல்லாக இருப்பர். எங்ஙனம் எனில், குறுகிய சிந்தை நிரம்பியிருக்கும்; சகிப்புத் தன்மை இராது; கர்வம் மிகுந்து காணும்; படபடப்பே ஓங்கி நிற்கும்; மாறுபட்ட கருத்துள்ளவர்களைக் கண்டால், கடுகடுப்பும் அருவருப்பும் தோன்றும்; தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று இருப்பார்கள். இத்தகைய மனப்பான்மை மகிமை தருமோ?

அத்தகைய பேர்வழிகள் மகா புத்திசாலிகளாக இருப்பினும், பெரிய தேச பக்தர்களாக விளங்கினும் என்ன? தேசத்தின் ராஜீய, பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு ஒருவகையில் பெருந்தடை தோன்றுவதற்குக் காரணமா யிருப்பார்கள். தாங்கள் கொண்ட கருத்தே சிறந்தது, பலனும் அளிக்கவல்லது, என்ற திடசித்தம் கொண்டு விடுகையில், அவர்களுடைய தீர்க்க தரிசனம், மன விரிவு இரண்டும் குன்றிப்போம்.

ஒத்துழையா இயக்கமே உயர்வுடையது என்னும் கொள்கையே கொண்ட கட்சியில் சென்ற பதினைந்து ஆண்டுகளாக நமது பாபு ராஜேந்திரர் ஈடுபட்டவர் என்றும் அவருடைய தீர்க்க தரிசனத்தில் இருள் வந்து மூடிக் கொள்ளவில்லை; ஆர அமர ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரும் தன்மையிலும் மாறுதல் ஏற்படவில்லை. தமது

கட்சியைச் சேர்ந்தோரிடமே அபிமானம் காட்டவேண்டுமென்ற எண்ணமும் ஒரு நாளும் உதிக்கவில்லை.

சில சமயங்களில் கட்சியின் கெடுபிடியும் செல்வாக்கும் சேர்ந்து, அவரது சிந்தை விரிவைக் குறுக்க முயன்றிருக்கலாம். அதனால் தமது தீர்க்கமான தீர்மானத்தை வற்புறுத்த அவர் தவறி இருக்கலாம். அதுபற்றி அவர்மீது வேண்டுமென்று குறை கூறுவோர் கூறுக. மனிதப் பிறவியினும் மேன்மை வாய்ந்த தெய்வப்பிறவி என்பதாக எண்ணி அவர் தருக்கி நின்றது கிடையாது. பொது வாழ்விலும் சரி, குடும்ப வாழ்க்கையிலும் சரி, பலவகையான நண்பர்களுடன் பழகுவதிலும் சரி, உயர்ந்த சித்த சுத்தியும் உள்ளங் கலந்த அன்பும் ஒப்புயர்வில்லா ஊக்கமும் வாய்ந்த உத்தம பொது ஜன சேவகர் என்பதில் ஐயம் இல்லை. உள்ளதை உள்ளபடி உணர்தலும், அறிதலுமே உண்மையை உணர்வதாம்.

பாபு ராஜேந்திரப் பிரஸாதர் பிரமாதமான காரியங்களைச் சாதித்திருக்கிறார். பீகார் பூகம்ப கஷ்ட நிவாரண வேலையே சாட்சி. அனைவரும் ஆச்சரியம் அடையும்படியான சக்தி அவருக்கு உண்டு.”

---

17. முடிவுரை

பீகார் மாகாணம் சிறப்பு வாய்ந்தது. அங்கே ஜனித்தார் பாபு ராஜேந்திரர். பிறந்த வருஷம் 1884. தாய்தந்தையரின் செல்வப் பிள்ளையாக விளங்கினர். பள்ளிக்கூடம் போகுமுன் ஒரு மௌல்வியிடம் (முகம்மதியப் பண்டிதரிடம்) வாசித்தார். பிள்ளையின் பெருமதிகண்டு மௌல்விக்கு மகிழ்ச்சி பிறந்தது. பள்ளிக்கூடத்தில் சேர்ந்த பின்பு எல்லா வகுப்பிலும் அவருக்கே முதல் ஸ்தானம்.

வருஷத்திற்கு ஒரு வகுப்பு வீதம் பையன்களை உயர்த்துவது வழக்கம். ராஜேந்திரரின் புத்தி கூர்மை கண்டு, இரண்டு வகுப்பு வீதம் ஆசிரியர் உயர்த்தினர். பார்த்தார் தமையன் மகேந்திரப் பிரஸாதர். "இரண்டு வகுப்பு வீதம் மாற்றினல் பையனுக்கு மூக்கு வெளுத்துவிடும்; ஒரு வகுப்பு வீதம் மாற்றினல் போதும்" என்று வற்புறுத்தினுர் ஆசிரியரிடம். பாடசாலைப் படிப்பிலும் சரி, காலசாலைப் படிப்பிலும் சரி, ராஜேந்திரரின் மதிவன்மை கண்டு மகிழாத மாணவரும் கிடையாது; ஆசிரியரும் கிடையாது.

அவர் எம். ஏ., எம். எல்., பட்டம் பெற்றவர். இரண்டொரு பரீக்ஷை தவிர, எல்லாவற்றிலும் வங்க, பீகார் மாகாணங்களிலே யாவரினும் முதன்மையாகத் தேறியவர், தங்கப் பதக்கமும் வெள்ளிப் பதக்கமும் பெற்றவர். பெற்ற பதக்கங்கள் பன்னிரண்டுக்கு மேலிருக்கும். மாதம் நாற்பது ஐம்பது வீதம் உபகாரச் சம்பளமும் பெற்ருர்.

ரசாயன சாஸ்திரத்திலே உலகப் பிரசித்தி பெற்றவர் ஆசார்யர் பிரபல சந்திர ரே. ஜட தத்துவ சாஸ்திரத்தில் ஜகமெங்கும் கீர்த்தி வாய்ந்தவர் ஜகதீச சந்திர வசு. அந்த இரு மேதாவிகளிடம் படிக்கும் பாக்கியம் பெற்றவர் பாபு ராஜேந்திரர். ஒரு சமயம் அவர் ரசாயன சாஸ்திர பாடம் வேண்டாமென்று சொல்லி வேறு பாடம் எடுத்துக் கொண்டார். அது கண்டதும், ஆசார்ய ரே, "அப்பனே! என்ன இது! எங்களைக் கைவிட்டுப் போய்விட்டாயோ!" என்று பரிவுடன் கேட்கலானுர்.

கல்கத்தா சர்வ கலாசாலையின் உபதலைவராக நெடுங்காலம் விளங்கி அதனை உயர்நிலைக்குக் கொண்டுவந்தவர் ஸர். ஆஷுதோஷ் முக்கர்ஜி என்பவர். இவர் இணையிலாக் கல்விமான்; மகா மேதை. இவரும் பாபு ராஜேந்திரரின் புத்தி கூர்மையைக் கண்டு புகழ்ந்து பேசலானுர். முஸபர்பூர்

கலாசாலையிலே ராஜேந்திரர் பேராசிரியராக அமர்ந்தார் அல்லவா? நண்பரொருவர் நயந்து கூறும் வண்ணம் அதன் காரணம் என்னவென்றால்:—

"அக் கலாசாலை சரிவர நடைபெறவில்லை என்றும், போதனுமுறை சீர்கேடாக உளதென்றும் புகார் இருந்தது. கல்கத்தா சர்வ கலாசாலையின் ஆதரவை இழக்க நேருமோ என்றும் அக்கலாசாலையின் நிர்வாகிகள் அஞ்சினார்கள். அப்போது, 'ஏன் கவலை? பாபு ராஜேந்திரரை ஆசிரியராக நியமியுங்கள். அவர் ஆசிரியராக இருக்கிறாரென்றால், கலாசாலை சரிவர நடக்கு'மென்று ஸர் ஆஷுதோஷ் முக்கர்ஜிக்கு நம்பிக்கை பிறக்கும்" என்றார் ஒரு கனவான். அதன்மேல் பேராசிரியராக ராஜேந்திரர் அமர நேர்ந்தது. அமரவே, நிர்வாகிகள் நிம்மதி கொண்டார்கள்.

சின்ன வயது முதல் அவர் ஓடி ஆடி விளையாடுவது வழக்கம். கலாசாலையில் இருக்கும்பொழுது தேகப் பயிற்சிக்கான கால்பந்துபோன்ற விளையாட்டுக்களில் வெகு பிரியமுள்ளவர். கால்பந்து கோஷ்டியின் நாயகனாகவும் விளங்கினார். உடல் வன்மையை அவர் அலட்சியம் செய்யவில்லை. ஆயினும் காசநோய் என்பது பிறவிநோய்போலும். பாவம் பாவம்!! அன்று முதல் இன்றும் அந்நோய் நமது பாபு ராஜேந்திரரை வாட்டி வருகின்றது.

ஐந்தில் வளைந்தால் ஐம்பதில் வளையும் என்பது ஒரு பழமொழி. ஆதலின், பிற மாணவரையும் ஆதி முதல் ராஜேந்திரர் ஒருமைப்படுத்தினார்; சமூக சேவையில் ஈடுபடச் செய்தார், தேசப்பணியிலும் புகுத்தினார். மாகாண மாணவர் மகாநாட்டினுக்கு ராஜேந்திரரே மூல பிதா. அப்பொழுது முதலே அஹிம்சை வழியில் ஆர்வம் உள்ளவர். பிற மாணவரிடமும் அவ்வழிபடியப் பார்த்தவர். அது கண்டு, ஒரு பத்திரிகை கூறிய புகழுரை இது:—

"வங்க மாணவரில் சிலரோ மிருக சுபாவத்தில் மிஞ்சி நிற்கின்றனர். பீகார் மாணவர் அவ்விதம் இல்லை; சாந்த மான மார்க்கத்தில் சிந்தை கொண்டுளர். அடுத்தடுத்துள்ள இரண்டு மாகாண மாணவர்களிடம் அவ்விதம் வெவ்வேறான சுபாவம் கொண்டிருத்தல் ஜாதிக்குணம் என்பர் சிலர். முன் னின்று நடத்தும் தலைவர்களின் தன்மை என்றே சொல்ல வேண்டும். பீகார் மாணவரின் தலைவர்களைப் போற்றிப் புகழ்தல் அவசியம். பீகார் மாணவரையும் இச்சந்தர்ப்பத் தில் புகழ்ந்து பேசுதல் வேண்டும்."

பீகார் மாகாண மாணவர் மகாநாட்டைத் தோற்று வித்தவர் ராஜேந்திரரே; உடனிருந்து வளர்த்தவரும் அவர்தான். அதன் விசேஷத்தைக் குறித்து மற்றொரு பத் திரிகை அன்று எழுதியது இது:—

"நமது மாகாகாண மாணவர் மகாநாடு விசேஷம் வாய்ந் தது. இதற்கு இணையான மகாநாடு இந்தியாவுக்குள் கிடை யாது. காங்கிரஸ், கான்பரன்ஸ் முதலிய கூட்டங்கள் இப் போது எங்கும் சர்வ சாதாரணம். அக் கூட்டங்கள் எல் லாம் வயதுவந்த பெரியவர்களால் நடத்தப்படுகின்றன. நமது மகாநாடோ இளைஞர்களால் நடத்தப்படுவதாகும். எனினும் பலனோ கொஞ்சம் அன்று. உங்கள் ஊக்கமும் உற்சாகமும் எங்கும் பரவியுள; யாரையும் சூழ்ந்துமுள. உங் களது மகாநாட்டைப் பின்பற்றியே மாகாண ராஜீய மகா நாடும், 'மாகாணத் தொழி லபிவிருத்தி மகாநாடும் தோன்ற லாயின. இது விசேஷம் அல்லவா?"

கலாசாலைப் படிப்பு முடிந்து, உத்தியோகத்தில் அமர்ந் ததும், தமது குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் குறித்து அவர் வருந்த வில்லை. பிற ஏழைக் குடும்பங்களின் மீதே அக்கறை கொண்டார்; அவற்றைக் கைதூக்கி விடவும கருத் துக் கொண்டார். சொந்தக் குடும்பத்தை அவ்வளவு கவ

ளிக்க வில்லையே என்று உற்றார் பெற்றாருக்கு மனத்தாங் கல் உண்டு. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்' என்னும் வாக்கியத்தைக் கடைப் பிடித்தவர் பாபு ராஜேந்திரப் பிரஸாதர். இப்போது அம் மனத்தாங்கல் கிடையாது.

வக்கீல் தொழிலில் மாதாமாதம் ஆயிரக் கணக்கில் பணம் வந்தும், படாடோபத்தில் அவ்வளவாக மோகம் கொள்ளவில்லை; எளிய வாழ்க்கையே மேற்கொண்டிருந்தார். சம்பரான் ஜில்லாவுக்கு மகாத்மா சென்று ஊழியம் புரியத் தொடங்கியதும், ராஜேந்திரரின் வாழ்க்கை இன்னும் எளிய தாயிற்று. ஒரு சமயம் தமது பாத்திரத்தை ராஜேந்திரர் கழுவிக்கொண்டு வந்தார். அதில் கொஞ்சம் கரி இருந்தது. "இப்படித்தானா இருக்கும் உமது வேலை?" என்றார் மகாத்மா காந்தி. உடனே பாத்திரத்தை நன்கு துலக்கிக்கொண்டு வந்தார் ராஜேந்திரர். அப்போது, "பார்த்தீர்களா! ஹை கோர்ட்டு வக்கீல்கள் தங்களது பாத்திரங்களை நன்கு துலக்கும்படி நான் செய்தது பெருமை அல்லவா?" என்று காந்தியடிகள் பரிகாசமாகப் பேசினார். அன்று முதல், காந்தியை ஒத்த தூய, எளிய வாழ்க்கையே ராஜேந் திரர் நடத்திவருகிறார்.

செல்வத்தைச் சேமித்து வைப்பதினும், பிறருக்கு அள்ளிக்கொடுத்தலே பரமானந்தம் என்பர் பெரியோர். நாலா யிரம் ஐயாயிரமாக வரும்படி வந்தும், ஒத்துழையா இயக் கங் காரணமாக வக்கீல் தொழிலை ராஜேந்திரர் விட்ட தினத் தில், அவர் கையிருப்பில் இருந்த தொகை ரூபா இருபத் தைந்தே. யானை படுத்தால் குதிரை மட்டம் என்பர். அதுகூட இல்லை. ஆயினும் அவர் வருந்தவில்லை. வருங் காலத்தில் எவ்விதம் வாழ்வது என்று ஏங்கவும் இல்லை. போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து அல்லவா?

பீகார் மாகாண வாசிகளாய், நம் தேசமெங்கும் சிறப்பு எய்தியவர்கள் மஷ்ருல் ஹக், ஹாஸன் இமாம், அலிஇமாம், ஷர்புதீன் முதலியவர்கள். இவர்கள் மகா புருஷர்கள். இவர்கள் அனைவருக்கும் ராஜேந்திரரைக் கண்டால் பெரு மதிப்பு ; மிக்க விசுவாசம், பேராதரவும் உண்டு. மிக நல்ல வர் என்றே யாரிடமும் பேர்வாங்கினர். மகாத்மா காந்தியின் மதிப்புக்குப் பாத்திரமாதல் பெரும் பேறுகும். நமது மாகாணத் தலைவரான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி யிடம் மகாத்மா மிக்க மதிப்புக்கொண்டிருப்பது போலவே ராஜேந்திரரிடமும் மதிப்புக்கொண்டவர்.

சுதேசிய இயக்கம் தோன்றிய காலந்தொட்டு காங்கிரஸ் சேவகராக விளங்கி வருகிறார். சில சமயம் அம் மகா சபை யின் பொதுக் காரியதரிசியாகவும் இருந்தார். மூன்று முறை சிறை சென்றார்; முற்றும் துறந்த இல்லத் துறவி போல் இருக்கிறார். புகழ்ச்சி கிட்டினும் இகழ்ச்சி நேரி னும் இரண்டும் ஒன்றே என்றெண்ணும் இயற்கை உள்ள வர். பாரதத்தாய் மனங்களிக்க, வயிறு குளிர, வந்த புதல் வரில் - உத்தம புதல்வரில் - ஒருவர் நமது ராஜேந்திரர்.

கோபால கிருஷ்ண கோகலே, லாலா லஜபதிராய் இவர் களைப்போல், தமது மாகாணத்தில் ராஜீய சமூக சேவைக்கு இளைஞரைப் பழக்கும் ஸ்தாபனம் ஒன்று காண விரும்பி னர் பாபு ராஜேந்திரர். போதனை கொடுப்பதுடன் வாழ் வுக்குரிய தொழிலும் பயிலுமாறு செய்யவேண்டும் என்பது பாபுவின் பேராவல். அந்த ஸ்தாபனம் ஏற்படுவதற்கு ஓர ளவு பணமும் சேர்த்துக்கொடுத்தார் மகாத்மா காந்தி. ராஜீயக் கொந்தளிப்பின் காரணமாக அந்த ஆவல் கைகூட வில்லை. எதற்கும் காலம் வாய்க்கவேண்டும் அல்லவா ?

தாழ்ந்தவகுப்பினர் என்போரைக்குறித்து, பாபுவின் கருத்து யாதெனில்:—“ தாழ்ந்த வகுப்பினர் என்போரின்

விஷயத்தில் இரண்டு அம்சங்கள் உண்டு. ஒன்று சமூக ஆசாரத்தைச் சார்ந்தது; மற்றொன்று மதத்தைப்பற்றியது. இரண்டையும் இந்துக்கள் தீரமான தன்மை கொண்டு தீர்த்துவைக்க வேண்டும்; வைத்தால் இந்து மதத்தின் மீதுள்ள மாசு போகும்.

"ஆலயங்களில் ஈசுவர தரிசனம் செய்தல், கிணறுகளில் ஜலம் எடுத்தல், பள்ளிக்கூடங்களில் படித்தல், ராஜ பாட்டையில் நடத்தல் இவற்றில் சரிசமமான உரிமை அவர்களுக்குத் தருதல் வேண்டும். அவர்களும் இந்துக்களே, வேறல்லர் என்று நிலையான ஒழுங்கு செய்தல் இந்து சமூகத்தின் பொறுப்பாம். இது ஒரு சோதனையே. இந்து சமூகத்தில் ஜீவதாது நன்கு பேசுமானால், பெருந்தன்மையுடன் அம்மகத்தான காரியத்தில் ஈடுபடுதல் அவசியம். இந்து சமூகத்திலிருந்து அவர்களைப் பிளவுபடுத்துவதற்கு இடமிருத்தல் கூடாது. நல்லெண்ணம் அவநம்பிக்கையை அகற்றும்."

சுயராஜ்ய சித்தியைக் குறித்து அவர் கூறியிருப்பது இது:—"ஊழியம் தியாகம் இரண்டையும் முன்னிட்டே சுதந்தரமார்க்கத்தில் செல்லமுடியும். அவ்விரண்டுமே உரைகல். வலிமைகுன்றி, ஒற்றுமையின்றி, பிளவுபட்டு, சிதறுண்டு, மனவலியற்றுக் கிடப்பின், சுயராஜ்யம் கிட்டாது; கிட்டினாலும் கைநழுவாமல் காத்துக் கொள்ளமுடியாது. பரிசுத்தமாய், வன்மையாய், ஒற்றுமையாய், ஒழுங்காய், தீரமாய் இருப்பின், இந்தியாவுக்கு எதிராக இங்கிலாந்து என்ன என்ன செய்த போதிலும் சரி, நாம் சுயராஜ்ய சித்தி எய்துவதைத் தடுத்துவிட முடியாது. நன்னெறியில் நின்று நம்மவர் நடந்து வருகையில், நம் தேசம் வெற்றி பெறுதல் திண்ணம்!"

உலகு அனைத்தும் ஈசுவர மயம், மக்கள் அனைவரும் நடமாடும் கோயில். இந்த எண்ணம் வருதல் அருமை. பெரியாரில் பலர் அந்த எண்ணம் பெறவே ஈசனை வழுத்தியுளர். அப்பெரியாரில் ஒருவர் தாயுமானவர். இவர்,

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

என்று பாடியுள்ளார்; மேலும்,

அன்பர் பணிபுரிய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும்

என்றும் கூறியுள்ளார். தாயுமானவரைப் பின்பற்றி நமது ராஜேந்திரப் பிரஸாதரும் எல்லாரும் இன்புற்றிருக்கஇச்சை கொண்டு, அன்பர் பணி புரிய ஆர்வம் பூண்டு, இன்பம் எய்த எண்ணி நிற்கிறார். பாரத மாதாவின் தவப் புதல்வரான பிரஸாதர் நம் தமிழக அன்பரைக் காணவந்திருக்கும் சமயம் இது. அவர் வரவு நல்வரவாகுக. அவரும் அவர் குடும்பமும் நீடூழி வாழ்க! வந்தே மாதரம்!

PRINTED AT THE LIBERTY PRESS, G. T. MADRAS.—(35119—2—22.)

தியாக மூர்த்தி பண்டித

மோதிலால் நேரு

33-படங்களுடன் :: விலை அணா 12

ஸ்ரீமான் வே. சாமிநாத சர்மா

தொகுத்தது.

'தமிழ் நாடு' ஆசிரியர்

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு

அவர்கள் சிறப்புரையுடன் கூடியது.

பத்திரிகைகளின் புகழுரைகள்

தமிழ் நாடு:—* *உத்தம தேச பக்தர் பண்டித* மோதிலால் நேருவின் *சரித்திரத்தை அறிய விரும்பும் தமிழருக்கு இந்நூல் பயன்பெறுமென்றே கருதுகிறோம்.*

The Hindu.— * The Publishers have done a service to the Tamil Nadu by publishing in Tamil the biography of one who was the foremost leader of Indian opinion in modern times, except Mahatmaji and whose sacrifices and services in the cause of the country were unprecedented.

* * *

லோகோபகாரி:—*இதில் பண்டித மோதிலால் நேருவின் *சரித்திரம் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.*

* * *

நவசக்தி:— * *நூல் மிகத் திறம்படத் தொகுக்கப்பட்டிருக்கிறது.*

* * *

ஊழியன்:—*தமிழில் இத்தகைய ஒரு நூலின் தேவையையும், பயனையும்பற்றி எவ்வளவு எழுதினும் மிகை யாகாது.*

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

உலகப் பிரசித்திபெற்ற பிரேஞ்சு ஆசிரியர்,
'விக்டர் ஹ்யூகோ'வின் "Les Miserables" என்ற
கதை, நெஞ்சை அள்ளும் மகா காவியங்களுள் ஒன்ருகும்.
இந் நாவலைத் தழுவி எழுதப்பட்டது

அம்பலவாணன்

அல்லது **நாவாய்க் கைதி**

(துப்பறியும் நாவல்களுள் தலைமை வகிக்கும்,
'ஷண்முக சுந்தரம்' 'விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்'
'தஞ்சை நாயகர் தாழ்வு' முதலிய உயரிய நூல்களின் ஆசிரியர்)
பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., எழுதியது.

200-பக்கங்கள் கொண்ட முதல் பாகம் ரூ. 1-8-0
250 ,, இரண்டாம் பாகம் ரூ. 1-8-0

இந்நூலைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்

The Hindu.— *The present book is more faithful to the original and the style also is more vigorous and attractive. Not a single incident in the original has been left out and the characterisation of Ambalavanan has been done very well.

சுதந்திரச் சங்கு :— * இத்தகைய நூல்களை நமது ஜனங்கள் படித்து, இதுபோன்ற முயற்சிகளை மேலும் மேலும் பெருகி, தமிழ் இலக்கியம் விஸ்தரித்து வளர உதவிபுரிதல் அவசியம். * * *

ஜய பாரதி :— * பல அரிய உண்மைகளை விளக்கும் நவீனம் இது. படிப்போர்க்குத் தெவிட்டாத இன்பமளித்து மானிட இயற்கையை விளக்குவது என்பதற்கு, இதைப் படிக்க ஆரம்பித்தவர்களுக்கு முடித்தபிறகே மறு காரியத்தில் புத்தி செல்லுமென்பதே சிறந்த சான்ருகும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

வீரகேசரி
விட்டல்பாய் படேல்

அற்புத சரித்திரம்

10 படங்களுடன் :: அணா 12

சுதேசமித்திரன் உதவி ஆசிரியர்

திரு. ஆர். கிருஷ்ணமாச்சாரியார்

இயற்றியது.

இந்நூலைப் பற்றிய முககிய அபிப்பிராயங்கள்

தாருல் இஸ்லாம்:—* இப்பெரியாரது வாழ்க்கை நலன்களை இந்நூல் மிகத் தெளிவாக எடுத்து காட்டவல்லதாயிருக்கிறது. இந்நூலைத் தமிழர் படித்துணர்வது அவசியமே.

சுதந்திரச் சங்கு:—* படேலது தேச பக்தி, வீர உணர்ச்சி, அறிவுச் சொற்கள் முதலியவைகளை, நமது பார்வைக்கு வந்துள்ள இத்தமிழ் நூல், அப்படியே படம் எடுத்துக் காட்டுகின்றது. தேசத்துக்கு அத்தியாவசியமான இத்தகைய நூல்களை மேலும் மேலும் ஸ்ரீயுத கிருஷ்ணமாச்சாரியார் எழுத வேண்டுமென்றும், அல்லயன்ஸ் கம்பெனியார் பிரசுரிக்க வேண்டுமென்றும், தமிழர் ஆதரிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழ் நாடு:—* வீரர் படேலின் ஜீவிய சரித்திரத்தை தமிழர் ஒவ்வொருவரும் படித்து, வீர வாழ்வு பெறவேண்டுவது அவசியம்.

தினகரன்:—* இதைப் படிக்கையில், மனதில் உற்சாக மேற்படாத தேசாபிமானி எவருமிருக்க முடியாது.

இந்து சாதனம்:—* இந்நூல் தமிழ் மக்கள் எல்லோராலும் ஆர்வத்துடன் படிக்க வேண்டியதொன்றாகும்.

வீர கேசரி:—* கற்றார்க்கும் மற்றார்க்கும் இந்நூல் பயன்படத்தக்கது.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

மீராபாய்

அல்லது

பக்தியிற் சிறந்த பதிவிரதை

கண்ணைக்கவரும் போட்டோ படங்களுடன் விலை அணா 12

திரு. K. S. ராமசுவாமி, எம். ஏ., எல். டி.,

அவர்கள் இயற்றியது.

ராவ் பஹதூர் திரு. C. ராமாநுஜாசாரியார், பி. ஏ.,

அவர்கள் முன்னுரை கொண்டது.

பக்த சிரோமணியாம் மீராவின் திருச் சரிதையை அறியாதார் இந்நாட்டில் எவருளர்? அவரது வாழ்க்கையையும், பக்திப் பெருந்தகையையும் பற்றிப் பல நூல்கள் உளவாயினும், அழகிய தமிழ் நடையில், புதியமுறையில், மனங்கவர் சித்திரப் படங்களுடன், படிப்போர், ஆரம்ப முதல், கடைசிவரை நிறுத்தாமல் படிக்கும் வண்ணம் எழுதப்பட்டுள்ள நூல் இது ஒன்றேயாகும். இவ்வுயரிய நூலை உடனே வாங்கிப் படித்து, பக்தி அமுதைப் பருகி ஆநந்தக் கடலில் ஆழ்வீர்களாக. விலை அணா 12

பொருளடக்கம்

(1) மீராவின் திரு அவதாரம்; (2) பால்யப் பருவம்; கோபால கிருஷ்ண விக்கிரகம்; (3) மீராவின் அன்பு முதிர்ச்சி; (4) பால லீலை-பக்தியின் பெருக்கம்; (5) விவாகப் பேச்சும் அரசியின் விசாரமும்; (6) மீராவின் மனோ விசாரம்; (7) மீவார் ராஜ்யத்து அரசனான கும்பாஜிராணா; (8) தாயும் மகளும்; (9) விஷபானம்-கண்ணன் கருணை; (10) மீராவின் திருமணமும், கிருஷ்ணன் கோயிலும்; (11) இல்லற வாழ்க்கையும், இறைவன் தொண்டும்; (12) ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி-முத்தியை நாடினோனொருவன் கொடுத்த முத்துமாலை; (13) கும்பாஜியின் துயரம்-மீராவின் மன நிலை; (14) வாக்குவாதம்; (15) மீராவின் பெருமகிழ்ச்சி; (16) பழைய கதை; (17) மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்; (18) புனர் ஜன்மம்; (19) பிருந்தாவனம்; (20) ராணாவின் நிலைமை; (21) கண்ணனை நாடியடைந்த நான், கணவரை இனி நாடலாகுமோ? (22) மீரா கிருஷ்ணன். விலை அணா 12.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

:: அரசியல் ஞானி ::

அரங்கசாமி ஐயங்கார்

(படங்கள் கொண்டது)

இது
சுதேசமித்திரன் உதவி ஆசிரியர்
ஆர். கிருஷ்ணமாச்சாரியார்
இயற்றியது.

மைசூர் திவான்
ஸர். மிர்ஸா இஸ்மேயில், Kt.,
அவர்கள் முன்னுரையுடனும்,

தமிழ்நாட்டுத் தலைவர்
ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்
அவர்கள் சிறப்புரையுடனும் கூடியது

491 - பக்கங்கள் :: கலிகோ பயிண்ட்

விரிவான சரித்திரம் (கலிகோ) ... ரூ. 2—0—0

சாதாரண பயிண்டு ... ரூ. 1—8—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்

இந்நாவல் பெயர்பெற்ற துப்பனுன ஷண்முக சுந்தரத்தின் துப்புத்திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. மிகவும் எளியநடை. எடுத்தவர் படித்து முடிக்காமல் கீழே வைக்க முடியாது. 4-படங்களுடன் ரூ. 1.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

ஸ்ரீமான் வா. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், எம். ஏ.—* கதையின் சுவையும் கற்கண்டின் சுவைபோல ஒரே தன்மையதாய் முதன்முதல் இறுதிவரையும் நன்கு அமையப் பெற்றுள்ளது. இந்நூலின் முக்கிய புருஷனுன ஷண்முகசுந்தரத்தின் துப்பறியும் திறமும், பக்தியின் சிறப்பும், உத்தம குணங்களும் படிப்பவர் மனத்தைக் கவரத்தக்கன.

New India.—This is an original detective tale in Tamil. The hero of course, is the detective Shanmugasundaram, who has already made himself popular as the hero of a novel bearing that name and written by the same author. * * * The story is full of interest from beginning to end.

The Hindu.—* This is an interesting detective novel. The story is designed to bring out the strength and value of chastity for womenfolk and as such the book deserves to be placed in the hands of all young girls. The style is simple and the printing good.

நவசக்தி.—இந்நூலுக்கு உயிர்நாடியாகவுள்ள ஷண்முகசுந்தரம் தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட குற்றத்தை ஆராய்ச்சி செய்வதில் காண்பிக்கும் சாமர்த்தியங்கள் போற்றத்தக்கனவாயிருக்கின்றன. இந்நூலைப் படிக்குங்காலத்து உள்ளத்தில் ஒருவித இன்பம் உண்டாகிறதென்பதை ஈண்டும் குறிப்பிட விரும்புகிறோம். இதை ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவது அவசியம்.

சுதேசமித்திரன்.—* * * படிக்கப் படிக்க அறிவையும், தெய்வ பக்தியையும், கற்பின் மகிமையையும், பசுமரத்தாணி போல், மனதில் பதியுமாறு இப்புத்தகம் எழுதப் பெற்றிருப்பதால் இதனைப் படிப்போர் பயனடைவார்களென்பது திண்ணம்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விஜய பாஸ்கரன்

அல்லது

ஒரு குற்றத்துக்கு ஒன்பது குற்றம்

திரு. அ. சுப்பிரமணிய பாரதி எழுதியது

பெரிய நாவல் :: விலை ரூ. 2

இந்த நாவல், படிப்பவர்கட்கு பாஷா ஞானமும், நீதி விளக்கமும், அரிய பெரிய கருத்தும் நமது பெரியவரின் நடவடிக்கைகளும் விளங்கக்கூடியபடி எழுதப்பட்டுள்ளது. நடை சிறந்து, கற்பனைகள், அலங்காரங்கள், பழமொழிகள், சம்பாஷணைகள் முதலிய முறைகளைப் பின்பற்றி இருக்கின்றமையின், படிப்பவர்க்கு இது உற்சாகந் தருமென்பதில் ஐயமில்லை. அன்றியும் இது குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல் முதலிய குற்றங்களின்றி, உலகம் நல்வழிப்பட வேண்டுமென்கிற நோக்கத்துடனும் மாறுபடா மனநிலையுடனும் பெரியோர்க் கஞ்சி எழுதியதாதலின் கல்லார்க்கும் கற்றவர்க்கும் மற்றும் எல்லார்க்கும் இன்பமளிக்குமொரு சிறந்த முயற்சியாகும். இதில் லோபகுணம், பொறாமை, காமம் முதலிய இழி குணங்களினு லுண்டாகும் இழிவு, சத்தியம், தயை, சாந்தம் முதலிய நல்ல குணங்களினு லுண்டாகும் மேன்மையையும் பெரியோர்களுடைய தரிசன விசேஷமும், தெய்வ பக்தியின் சிறப்பும், ஆத்ம சக்தியின் அபூர்வச் செயலும் இன்னும் இவை போன்ற பல நன்னடக்கைகளின் விசேஷங்களும் பலவாறான சூழ்ச்சிகளுடன் கூடிய அரிய பெரிய ஆச்சரிய சம்பவங்களினுலே விளக்கப்பட் டிருக்கின்றன. இதில் நாயகி நாயகர்களாயமைந்துள்ளவர்கள், அந்யோந்நிய தம்பதி யாகையினுல் அவர்களுடைய செய்கைகளும் சம்பாஷணைகளும் நடவடிக்கைகளும், உறுதி நிலையும், ஊக்கமும், உள்ளக் கிளர்ச்சியும், படிப்பவர் வியந்து பேசும்படியா யிருக்குமென்பது துணிபாம். இது ஒரு பெரிய நாவல். ரூபா 2—0—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

இதுவரை வெளிவராத மிகவும் அரிய நூல்!!

ஸ்ரீ அருணகிரிநாதர்

- திருப்புகழ் -

விருத்தியுரை

:: சுவாமிமலை, பழநி, திருச்செந்தூர் ::

ஆகிய திவ்ய ஸ்தலங்களில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுள்மீது, ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளிய திருப்புகழ்ப் பாடல்களும், அவற்றிற்குத் தெளிவான பதவுரை, விருத்தியுரை முதலியனவும் கொண்டது.

:: 552-பக்கங்கள் ::

11-போடோ படங்கள்

கிளேஸ் பதிப்பு	ரூ.	6-0-0
பேதர் வெயிட்	ரூ.	8-0-0

நூலின் கௌரவத்துக்குத் தக்கபடி நேர்த்தியான பைண்ட்

:: சில முக்கிய அபிப்பிராயங்கள் ::

இந்து சாதனம் :—* உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கிறது.

குமரன் :—* பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக்கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

அல்லயன்ஸ் கம்பெனி,

ஷண்முக விலாஸம், மயிலாப்பூர், சென்னை.

:: "க லை ம க ள்" ::

தமிழ் மாதப் பத்திரிகைகளுள்
தலைசிறந்து விளங்குவது

பிரபலஸ்தரடங்கிய கமிட்டி ஒன்றால் நன்கு நடத்தப்படுவது ; பற்பல அருமையான விஷயங்கள் கொண்டது ; பொருளீட்டுதலையே நோக்காகக் கொள்ளாதது ; தமிழ் வளர்ச்சிக்கே அரும்பாடு பட்டுவருவது; சித்திரப்படங்கள் நிறைந்தது; ஒவ்வொரு சஞ்சிகையும் 100-பக்கங்களுக் கதிகங்கொண்டது. சிறுவரும் சிறுமியரும் உற்சாகத்துடன் படிக்கக் கூடியது.

வருட சந்தா (தபால் செலவுடன்)

			ரூ.அ.பை.
இந்தியா, பர்மா, ஸிலோன்	...	...	4—0—0
மலாய் நாடு, தென் ஆபிரிக்கா	...	...	6—0—0
தனிச் சஞ்சிகை	...	...	0—6—0

சில முக்கிய அபிப்பிராயங்கள்

தனவணிகன்:— * *அறிவைப் பெருக்கும் கட்டுரைகள்; இனிய கதைகள் ; கலைப்பெருக்கு மிக்க ஆராய்ச்சிகள் ; நாட்டுச் சரித்திரங்கள் ; சிறுவர்களான இன்றியமையாத பொருள்கள், 'கலைமகளை' அழகுசெய்து நிற்கின்றன.*

The Hindu.—*It has always aimed at and maintained a high cultural standard. *It is a sort of family Magazine* containing matters of interest to the father, mother, and the kiddies.

The Madras Mail.—The issue is rich in contributions to all its sections. The women's section and the children's section are, as usual, well represented. Its list of contributors includes eminent scholars and professors in various subjects.

சுதேச மித்திரன்:— * * *வழக்கம்போல் இதில் பல அரிய வியாசங்கள் அடங்கியிருக்கின்றன.*

: மானேஜர், கலைமகள், மயிலாப்பூர், சென்னை :